Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 15 | சனிக்கிழமை | (29.01.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 121

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## நாடு முழுவதும் தேர்தல் வன்முறை

### 'கபே' குற்றச்சாட்டு




(கொழும்பு)

வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்துள்ளதோடு தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாக ஆரம்பித்துள்ளதென கபே இயக்கம் தெரிவித்துள்ளது.

அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் மூலம் தேர்தல் சமயத்தில் அமைதியான சூழலை எதிர்பார்க்க முடியாதென கபே இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்ட செயலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தை அவமதித்தாராம் பொலிஸ் மா அதிபருக்கு அழைப்பாணை



(கொழும்பு)

பொலிஸ் மா அதிபரை எதிர்வரும் பெப்பிரவரி மாதம் 11ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் சமூகம் அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்திற்கு வழங்கிய உறுதி மொழி ஒன்றினை நிறைவேற்ற தவறிய நிலையில், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழேயே இந்த உத்ரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் சேவையில் இருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் வெடித்தது குண்டு ஒருவர் பலி; இருவர் காயம்!

### புதைந்திருந்த வெடிகுண்டு உயிர்குடித்தது



(கிளிநொச்சி)

**வன்னியில் இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்திருக்கின்றனர். விசுவமடுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த வெடிவிபத்தில் வீதித் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் குழுவினர் சிக்கிக்கொண்டனர்.**

**இதன்போது நெடுஞ்செழியன் ரமணன் (வயது 19) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளார். இதைவிட எஸ்.ரதன் (வயது 18) என்பவரும் மேலும் ஒருவரும் காயங்களுக்குள்ளாகினர்.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு நிராகரிப்பு விவகாரம் ஜனாதிபதி தலைமையில் மந்திராலோசனை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் பல நிராகரிக்கப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் மந்திராலோசனை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்ற மேற்படி மந்திராலோசனைக் கூட்டத்தின் போது அமைச்சர் தினேஸ் குணவர்த்தன உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கம் வகிக்கும் பிராந்திய அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (11 ஆம் பக்கம் பார்க்க)

## விடைபெற்றுச் செல்லும் நல்லிணக்க ஆணைக்குழு

### இம்மாதத்துடன் அமர்வுகள் நிறைவு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றன.

இந்தநிலையில் இந்தக்குழு தமது அறிக்கையை எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதியன்று ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது. இதற்கிடையில் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு இன்று வடமத்திய மாகாணத்தில் தமது அமர்வுகளை நடத்தவுள்ளது.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா (12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைத் தலைவர் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு



(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் தடரெறு கோனே நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு ஐ.சி.ஆர்.சி இன் நிவாரண வேலைகளை மேற்பார்வை செய்யவும் செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர்களை பாராட்டவுமே கோனே இலங்கை வந்துள்ளார்.

இவர் கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்த கோனேக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கங்களின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தீவிரமடையும் பிரசார யுத்தம் நாடு முழுவதும் ஆரம்பம்

(கொழும்பு)

வேட்பு மனுத்தாக்கல்கள் நிறைவடைந்த நிலையில் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

இதன்படி, ஜே.வி.பி. பிரதான ஊர்வலங்கள் மற்றும் பேரணிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அதன் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு அனைத்து உள்ளூராட்சி சபை வேட்பாளர்களையும் தெளிவூட்டும் சந்திப்புகளை நடத்த ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை வெற்றிகொண்டதன் சூட்சுமம் என்ன?

### மனம் திறந்து பேசுகிறார் கோத்தபாய



(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான போரின் போது படைத்துறையினர் கடைப்பிடித்த தந்திரோபாயங்கள் குறித்த தெளிவு நாட்டின் அரசியல் தலைமையிடம் இருந்ததாலேயே போரை வெற்றிகொள்ளக் கூடியதாக இருந்ததாக படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கள நிலைமைகளை படைத்துறை சார் நோக்கோடு ஆராயக்கூடிய திறமை காணப்பட்டிருக்காவிட்டால், சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து புலிகளிடம் தோற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியதாக THE NATION எனும் ஆங்கில ஊடகத்தில் Gagani Weerakoon எழுதிய செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்திக் கட்டுரையின் முக்கியமான பகுதிகளை இங்கே தொகுத்துத் தருகின்றோம். (11 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் விசேட பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தரம் வாய்ந்த பயிற்றுநர்களால் கணனிப் பயிற்சி, தையல் பயிற்சி (Spoken English) ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் மாசி மாதம் 20ஆம் திகதி முதல் சலுகை அடிப்படையில் ஆரம்பிக்கவுள்ளதாக அறவழிப் போராட்டக்குழு தெரிவிக்கின்றது.

இரு பாலருக்கும் பிரத்தியேக வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற ஆர்வமுள்ளவர்கள் தலைவர், அறவழிப்போராட்டக்குழு, கைதடி நுணாவில், சாவகச்சேரி என்னும் முகவரிக்கு 16-02-2011ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# யாழ். நகரப் பகுதிக்கு அமைச்சர் திடீர் விஜயம்

# மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் புதிதாக அமையப் பெறவுள்ள பழக்கடை தொகுதி கட்டுமானப் பணிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பார்வையிட்டார்.

அப்பகுதிக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பழக்கடைத் தொகுதியைப் பார்வையிட்டதுடன் வர்த்தகர்களுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து முச்சக்கரவண்டித் தரிப்பிடம், தனியார் பேருந்து தரிப்பிடம் என்பவற்றுக்குச் சென்றதுடன் புதிதாக அமையப்பெறவுள்ள பால் விற்பனை நிலையத்தையும் பார்வையிட்டார்.

அத்துடன், மத்திய பேருந்து நிலைய மலசல கூடத்தைப் பார்வையிட்ட அமைச்சர் அவர்கள், அவற்றை மக்கள் பாவனைக்கேற்ற வகையில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.



இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ். மாநகர முதல்வர் பற்குணராசா யோகேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்த்தின விழா

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்வி வலய தமிழ்த்தின விழா இன்று சனிக்கிழமை 8.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா பிரமத விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

தேசிய, மாவட்ட மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும். மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேம்காந்தன் அறிவித்துள்ளார். (11)

# வடமராட்சி லயன்ஸ் கழகம் இலவச மருத்துவ முகாம்

(வடமராட்சி)

வடராட்சி லயன்ஸ் கழகம் கரவெட்டி கட்டை வீதி யாக்கரு விநாயகர் வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இலவச மருத்துவ முகாம் சேவையை நடாத்தவுள்ளது.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதியத்தின் மாவட்ட இணைப்பாளர் எம். பத்மநாதன் இம்மருத்துவ முகாமை ஆரம்பித்துவைத்து சிறப்புரையாற்றவுள்ளார்.

இம் மருத்துவ முகாம் சேவையில் நீரிழிவு பரிசோதனை, பொதுமருத்துவச் சிகிச்சை, கண் பரிசோதனை என்பன வைத்திய நிபுணர்களினால் நடாத்தப்படவுள்ளது.

எனவே, இதன் மூலம் பயன் பெறவிரும்புவோர் குறித்த நேரத்திற்கு முன்னதாக வந்து தமது பெயர்களைப் பதிவு செய்து சிகிச்சையினைப் பெற்று பயனடையுமாறு லயன்ஸ் கழக செயலாளர் லயன் துரைராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (100)

## தலைமைத்துவப் பயிற்சி

(கொக்குவில்)

சுண்டிக்குளி, கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பகல் 1.30 மணி வரை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் குடாநாட்டின் சகல இடங்களிலும் முன்னெடுத்து நடத்துகின்ற மேற்படி கருத்தரங்குகளை பணியாளர்கள் நெறிப்படுத்தி நடத்தி வருகின்றனர். (68)

# ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி நல்லூர் நோக்கி நடை பயணம்

## இன்னும் ஒரு வாரத்தில் யாழில்

(கொழும்பு)



நாட்டில் கடந்த பல வருடங்களாக நிலவிய அசாதாரண நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சுமூக நிலையை ஏற்படுத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆசிவேண்டி நாவலப்பிட்டி நவதிஸ்பனையைச் சேர்ந்த சிசிர லலித்குமார என்பவர் யாழ். நல்லூர் கந்தசாமி தேவஸ்தானத்தை நோக்கி நடை பயணமொன்றினை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளார்.

நாவலப்பிட்டி நவதிஸ்பனை உப அஞ்சல் அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற 27 வயதான இவர் கண்டி, மாத்தளை, அநுராதபுரம் ஊடக யாழ்ப்பாணத்திற்கு ஒரு வாரத்தில் நடை பயணமாக சென்றடையவுள்ளார்.

# வடமாகாணத்தில் இறப்பர் செய்கை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(கொழும்பு)

வடமாகாணத்தில் இறப்பர்ச் செய்கையை மேற்கெள்வது தொடர்பான சூழ்நிலைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடமாகாணத்திலுள்ள வவுனியா, கிளிநொச்சி. முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இறப்பர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுகளைமேற்கொண்டு வருகின்றது.

இந்தச் செய்கைக்காக அந்தப் பிரதேசங்களிலிருந்து ஏற்கனவே 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூலம் இப்பிரதேசத்தில் இறப்பர்ச் செய்கையை மேற்கொள்ளவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அறுவடை பாதிப்பு

(கரணவாய்)

வடமராட்சி பிரதேசத்திலுள்ள வயல் நிலங்களில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுவதால் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றன.

இதில் கப்பூது அண்டனதிடல், கிராய், கரணவாய், வெற்றிக்கான் உட்பட சில விவசாய வயல் நிலங்களில் அதிகளவில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அறுவடைக் காலம் ஆகியும் அறுவடையை மேற்கொள்ள முடியாது உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால், தாம் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (18)

# வடமராட்சியில் கோஷ்டி மோதல்.

(கரணவாய்)

குடும்பத்தகராறு காரணமாக இரு சாராருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் நேற்று முன்தினம் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராஜகிராமம், நெல்லியடி, கரவெட்டி ஆகிய பகுதிகளிலேயே மூன்று நாட்கள் தொடர்ச்சியாக கத்தி மற்றும் ஆயுதங்கள் கொண்டு இந்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றது. இரவு பகல் பாராது இடம்பெற்றுவரும் இம்மோதல் உச்சமடைந்ததில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்தச் சண்டையில் ஈடுபடுபவர்கள் குறித்து பொதுமக்கள் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# மருதங்கேணியில் மீள் எழுச்சி செயற்றிட்டங்கள் மும்முரம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் வடக்கின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏழு கோடி ரூபா செலவில் மருதங்கேணி வைத்தியசாலையும், மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடமும், உள்ளூர் வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மருதங்கேணி வைத்தியசாலை இரண்டரைக் கோடி ரூபா செலவிலும் மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு கோடி ரூபா செலவிலும், வீதிகள் மூன்றரைக் கோடி ரூபா செலவிலும் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான புனரமைப்பு வேலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (100)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கே.கே.எஸ். வீதியில் 2 1/4 பரப்புடன் 4 அறை மற்றும் சகல வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விலை 9 மில்லியன். தொடர்பு கொள்ள T.P. 0772474740. (R-015)


## சுற்றுப்போட்டி

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி மாசி மாதம் முதல் வழமை போல் ஆரம்பமாகவுள்ளதாக கழகத் தலைவர் எஸ்.பி. விவேகானந்தன் அறிவித்துள்ளார். (62)

# இலங்கையில் ஆயுட்கால எதிர்பார்ப்பு 63 வயதாகக் குறைந்துள்ளது

(கொழும்பு)

மக்களின் உடலியல் சுகாதாரத்திற்கு உணவுப் பழக்கங்கள் தாக்கம் செலுத்துவதாக டாக்டர் அசங்க விஜயரத்தின தெரிவித்தார்.

இலங்கையின் ஆயுட்கால எதிர்பார்ப்பு 63 வயது வரையாக குறைவடைந்துள்ளது. நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், கொலஸ்ரோல் போன்ற நோய்கள் சிறுவர்களையும் பாதித்துள்ளன.

செயற்கை இரசாயனங்கள் உணவுகளில் சேர்க்கப்படுவது இதற்கான காரணம் என்று அவர் தெரிவித்தார்.

தானியங்கள், அரிசி என்பன தொடர்பாக சில ஊடகங்கள் தவறான பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

பால்மா உட்பட பல உணவுகள் தொடர்பாக விமர்சனங்களை மேற்கொள்ள பல ஊடகங்கள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வைத்தியர்களின் பரிந்துரை இன்றி வலி நிவாரண மாத்திரைகளை அதிகளவில் உட்கொள்ள வேண்டாம் என்று உடல் கூற்று தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் கீதா பெர்னாண்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரிசிற்றமோல் உட்பட வலி நிவாரண மாத்திரைகளை ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையே உட்கொள்ளவேண்டும்.

இந்த மருந்துகளை அதிகளவில் பயன்படுத்துவதன் மூலம் சிறுநீரக நோய் உட்பட பக்கவிளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அவர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மருந்துகள் தொடர்பாக மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு நோயாளிகளுக்கு உரிமை உண்டு என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மருந்துகள் தொடர்பான மேலதிக தகவல்களை கொழும்பு - 10 மொறிஸ்கனர் வீதியில் அமைந்துள்ள இலங்கை ஔடதங்கள் அதிகார சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆங்கில மருந்துகளையும் ஆயுர்வேத மருந்துகளையும் ஒரே தடவையில் உட்கொள்ளக்கூடாது. வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைவாக மருந்துகளை உட்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொறுமையைவிடச் சிறந்தது தவமில்லை. திருப்தியைவிட உயர்ந்தது இன்பமில்லை. ஆசையைவிடப் பெரியது அறமில்லை. மன்னிப்பதை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.

- குருநானக் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## பட்டது போதும் உன்னாலே...

முப்பது வருட உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் இடையில் நோர்வே அரசும் மத்தியஸ்தம் வகித்து எத்தனையோ சமாதானச் சுற்றுப் பேச்சுக்கள் வெளியிடங்களில் நடந்து வந்தது.

நோர்வேயின் விசேட தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெம் சமாதானப் பேச்சுக்களுக்கு முக்கிய ஏற்பாட்டாளராக இருந்து செயற்பட்டார்.

தென்னிலங்கையில் அப்போதிருந்த இனவாதக் கட்சிகள் எல்லாம் இவரைத் துரோகி என்றும், வெள்ளைப்புலி என்றும் எதிர்கோஷமிட்டு நாட்டை விட்டுத் துரத்துமாறும் அப்போதைய அரசுகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்தன.

இந்த அழுத்தங்களை எல்லாம் பொருட்படுத்தாது நோர்வேதான் தஞ்சம் என்று கருதி அந்த அரசுகள் எதற்கும் செவிசாய்க்காது மௌனமாக இருந்தன.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு அண்டை நாடான இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு, ஐரோப்பிய நாடொன்றின் காலில் விழுந்த சிங்கள ஆட்சியாளர்களினது சுயநல அரசியல் நோக்குடன் ஆமாசாமி போட்ட தீர்க்கதரிசனமற்ற அரசியல் செயற்பாடே தமிழ் மக்களின் இன்றைய பரிதாப நிலைக்கு ஒரு காரணமாகவும் அமைந்துவிட்டது.

சமாதானப் பேச்சு மற்றும் மத்தியஸ்தம் செய்ய முன்வந்த எரிக்சொல்ஹெம் மத்தியஸ்த செயற்பாடுகளில் இருந்து விலகி செயற்பட்டு வந்ததாக அப்போது பலரும் விமர்சனம் செய்து வந்தமையும் நினைவு கூரத்தக்கது.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது, யுத்தம் நடைபெற்ற தன்மையும் கொடூரத்தையும் கண்டும் காணாதது போல் பார்த்துக் கொண்டு இருந்ததையும் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்க அன்று பக்கம் சார்ந்து ஆதரவு வழங்கி வந்ததுடன், அவர்களுக்கு உசுப்பேற்றிய சொல்ஹெம் இலங்கை அரசுக்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழீழ ஆதரவாளர்களுக்கும் இடையிலான சமாதனப் பேச்சுக்கான பங்காளராக இருந்து மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று வலிய வந்து கூறியதன் உள்நோக்கம் என்ன?

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது உலக நாடுகள் பலவும் யுத்தத்தை நிறுத்தும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தன. ஆனால், சிங்கள மக்களின் பார்வையில் புலி ஆதரவாளர்களாக கருதப்பட்டவரும், தற்போது நோர்வே அமைச்சருமான எரிக் சொல்ஹெம், தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு இலங்கை அரசிடம் எந்தவிதமான கோரிக்கையையும் முன்வைக்கவுமில்லை. மாறாக வேறு எதனையும் செய்ததாகவும் தெரியவில்லை.

ஆனால், இறுதி யுத்தத்தின்போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பும் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்றும், போரின் முடிவிற்கேற்ப புலிகள் தமது முடிவை மாற்றிக் கொள்வார்களென தான் எதிர்பார்த்திருந்ததாகவும் அவர் ஒரு உண்மையை இப்போது ஒப்புக் கொண்டுள்ளார். காலம் கடந்து அவர் கண்டறிந்த உண்மை எதற்கும் வக்கில்லாது போய்விட்டது.

இந்நிலையில், தனித் தாயகம் அமைப்பதற்கு முன்னேற்பாடாக, நாடு கடந்த தமிழீழ அரசு அமைத்து புலம்பெயர்ந்து வாழும் சொற்ப அளவினரான தமிழ் மக்களுடனான பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று மார்தட்டி நிற்கிறார் எரிக் சொல்ஹெம்.

புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் அங்குள்ள சுகபோக வாழ்க்கையை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு இங்கு வந்து மீளக்குடியமர்ந்த பின் இங்குள்ள பிரச்சினைகள் பற்றி தரகர்களின்றி அரசுடன் பேசட்டும்.

பட்ட அவலங்கள், உயிரிழப்புக்கள், உடமை அழிவுகள் மீண்டுமொருமுறை ஏற்படாதிருக்க பேசாமல் இருந்தால் போதும் என்பதுதான் மக்கள் விடுக்கும் வேண்டுகோள்.

இதனை நினைக்க பட்டதுபோதும் உன்னாலே... என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகிறது.

- ஆசிரியர் -

# 200 இற்கும் மேற்பட்ட புகலிடதாரிகள் மெக்ஸிக்கோ பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இலங்கையர்கள் உட்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் எனத்தெரிவிக்கப்படும் சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்களை மெக்ஸிக்கோ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்

டரக் வண்டியொன்றில் சென்று கொண்டிருந்தவேளை சுமார் 219 புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் அறுவர் இலங்கையரெனத் தெரிவிக்கப்படுகிறது.

மனிதர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத ட்ரெய்லர் ட்ரக் வண்டியொன்றில் இரகசியமாக இவர்கள் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 177 ஆண்களும் 33 பெண்களும், 9 சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய கட்டடத்தில் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் அலுவலகம் கடந்த 21 ஆம் திகதி முதல் யாழ். கல்வி வலயத்தின் பின்புறமாக அமைந்துள்ள புதிய கட்டடத்தில் இயங்கி வருவதாக மேலதிக கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

யாழ். வலயத்தின் பின்புறமாக தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்த இவ் அலுவலகம் அப்பகுதிக்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மாடிக்கட்டடத்தின் கீழ்ப் பகுதிக்கு மாற்றப்பட்டு இயங்கிவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## சுகாதார மத்திய நிலையங்கள் வடபகுதியில் புனரமைக்க அனுமதி

வடமாகாணத்திலுள்ள சுகாதார மத்திய நிலையங்கள் துரித கதியில் புனரமைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சுகாதார நிலையங்களை புனரமைப்பதற்கு ஜப்பான் அரசாங்கம் 150 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளதாகவும், இவற்றைப் புனரமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள சுகாதார மத்திய நிலையங்களே புனரமைக்கப்படவுள்ளன.

இந்தச் சுகாதார மத்திய நிலையங்களை புனரமைப்பதற்கான பிரேரணையைச் சுகாதார அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்த போது இதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்களுக்கும் ஓய்வூதியம் பிரதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

மீனவர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மீனவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியபங்களிப்புச் செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் ஒவ்வொரு மீனவருக்கும் மாதாந்தம் 7 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாக வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இறைச்சிக் கறியில் இறந்த நிலையில் பல்லி உணவுக்கடை உரிமையாளருக்கு அபராதம்

(கொழும்பு)

உணவுக்கடையில் வைக்கப்பட்டிருந்த கறியில் இறந்துகிடந்த நிலையில் பல்லி காணப்பட்டதனால் கடையின் உரிமையாளருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது.

இந்தச் சம்பவம் காலி றிச்மென்ட் வீதியிலிருந்த உணவுக் கடை யொன்றிலேயே இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது

உணவுக்கடைகளின் சுகாதாரம் தொடர்பாக, சுகாதாரப்பரி சோதகர்கள் சோதனை நடத்திய வேளை, மேற்படி கடையில் இருந்த இறைச்சிக்கறியில் இறந்த நிலையில் பல்லி கிடந்ததைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து கடை உரிமையாளருக்கு எதிராக காலி நீதிமன்றில் சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் கடை உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டார் இதனையடுத்து அவருக்குக் காலி மேலதிக நீதிவான் பொதரகம் ரூபா ஆறாயிரம் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கம்?

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரியாவுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வெள்ளைக் கொடி விவகார வழக்கு விசாரணையின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சாட்சியமளித்துக் கொண்டிருந்த வேளையில் பொலிஸ்மா அதிபரும் அங்கு சமூகமளித்திருந்தார். ஆனால் அவர் அங்கு தூங்கி வழிந்தபடி காணப்பட்டாரென ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதன் காரணமாகவே பொலிஸ்மா அதிபரின் பாதுகாப்புக் குறைக்கப்படவுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை கோத்தபாய ராஜபக்ஷவே மேற்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவருக்கு இனிமேல் சாதாரண பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இவரின் கீழிருந்த விசேட அதிரப்படையின் பொறுப்பும் அவரிடமிருந்து அண்மையில் பிடுங்கி எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆனையிறவு உப்பள செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருவதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தினால் உப்பளத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. ஆனையிறவு உப்பளத்திலிருந்து வருடாந்தம் 70 ஆயிரம் தொன்னுக்கு மேற்பட்ட அளவில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனையிறவு உப்பளத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் மூலம் உப்பு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றும் உப்பு உற்பத்திக்கான செலவை சேமிக்க முடியும் என்றும் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## விபரங்களை சமர்ப்பிக்கவும்


பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களது விபரங்களை தமக்குச் சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரைப் பணித்துள்ளார்.

"சிறுவர் பாதுகாப்புக்குழு" கூட்டம் நேற்று முற்பகல் யாழ். செயலகத்தில் யாழ் அரச அதிபர் தலைமையில் நடைபெறறது. இக் கூட்டத்தில் சிறுவர் தொடாபான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், கல்விப்பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தின்போது மேற்படி விபரங்களைத் தமக்குச் சமர்ப்பிக்கும்படி அரச அதிபர் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அவர்களைப் பணித்துள்ளார். இதேவேளை இக்கூட்டத்தின்போது சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாகவும் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாகவும் சிறுவர்களின் பாடசாலை விலகல் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது. (பா)

# உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை தலைமைத்துவமே தீர்மானிக்கும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் தலைவர்களை தலைமைத்துவமே தீர்மானிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இவர்கள் இரண்டு விடயங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவர். ஒன்று தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெறவேண்டும். அதே நேரத்தில் சபையைத் திறமையாக நடத்தக்கூடிய ஆளுமை கொண்டவராக இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வவுனியா செயலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மூன்று சபைகளுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, வெங்கல் செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரதேச சபைகளுக்கே மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாகவும் இந்த மூன்று சபைகளையும் தமிழரசு கட்சி கைப்பற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள், புத்தகங்கள் வழங்கல்



(வவுனியா)

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சைக்கிள்களும், புத்தகப் பைகளும் இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியினால் வழங்கப்பட்டன.

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதியில் மீள்குடியேறிய மாணவர்களுக்கு சைக்கிள்களும், புத்தகப் பைகளும் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். மல்லவராயன் கட்டையடம்பன் பாடசாலையில் வைத்து 18 பாடசாலைகளுக்கு 21 சைக்கிள்களும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 140 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் இராணுவத்தினர் 542 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி விக்கும் வியனகே, 542 ஆவது படைப் பிரிவின சிவில் நிர்வாக அதிகாரி கேணல் நலிந்த மகாவித்தாரண ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அனுமதியின்றி பட்ட பனையைத் தறித்த இருவருக்கு நீதிமன்றம் அபராதம் விதிப்பு

(வேலணை)

அனுமதி பெறாமல்பட்ட பனை மரத்தைத் தறித்த இருவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதி மன்றில் தொடுக்கப்பட்ட வழங்கொன்றில் இருவரும் குற்றவாளியாகக் காணப்பட்டதால் தலா 5000 ரூபா வீதம் இருவரையும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வேலணை மேற்குப் பகுதியைச் சேர்ந்த இருவர் தங்களினது வளவிற்குள் நின்ற பனைகளைத் தறித்ததாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் பனை மரத்தினைத் தறித்த இருவரையும் கைது செய்ததுடன், பனை மரத்தினையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். இதன் பின் இவர்களுக்கு எதிராக மேற்கொண்ட வழக்கில் எதிரியாகக் காணப்பட்ட இருவரையும் விசாரணை செய்த பின் வேலணை மேற்குப் பகுதிக்கான கிராம சேவை அலுவலரையும் விசாரணை செய்தபின் ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய்மகாதேவன் இந்தத் தீர்ப்பினை வழங்கியதுடன் கிராம சேவை அலுவலரிடம் பொதுமக்களிடம் உயர்ப் பனையானாலும் சரி, பட்ட பனையானாலும் சரி சட்டப்படி அனுமதி பெற்றபின்பே தறிக்கப்படல் வேண்டுமென அறிவிக்குமாறு பணித்துள்ளார். (05)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(வேலணை)

யாழ்கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் தெ.நிஷாகரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தப் பொதுக்கூட்டத்திற்கு கொட்டடி பகுதி ஜே/83 கிராமசேவை அலுவலர் கி.மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் நிலையத்தின் எதிர்கால அபிவிருத்தி, வளர்ச்சி என்பன ஆராயப்படவுள்ளதுடன், புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெறவிருக்கின்றது. (05)

# "மைதிலி" தொடரை ஒளிபரப்ப இடைக்காலத் தடை விதிப்பு

(கொழும்பு)

"மைதிலி" தொலைக்காட்சித் தொடர் நாடகத்தினை ஒளிபரப்புவதற்கு டான் தொலைக்காட்சிக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தமிழ் அலைவரிசையான வசந்தம் தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 8.30 மணிக்கு மைதிலி என்னும் இந்தியத் தொலைக்காட்சித் தொடர் ஒளிபரப்பாகி வந்தது.

மைதிலி தொடர்நாடகத்தின் இலங்கைக்கான முழு ஒளிபரப்பு உரிமையை வசந்தம் தொலைக்காட்சி பெற்று அந்நாடகத்தினை ஒளிபரப்பி வந்த அதேவேளை, டான் தொலைக்காட்சியும் அதே நேரத்தில் மைதிலி தொடரினை ஒளிபரப்பி வந்துள்ளது.

டான் தொலைக்காட்சி சட்டவிரோதமாக மைதிலி நாடகத்தினை ஒளிபரப்புவதாகக் கூறி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரமே அத்தொடரினை ஒளிபரப்பாவதைத் தடுக்குமாறு டான் தொலைக்காட்சிக்கு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இவ்வழக்கின் மேலதிக விசாரணைகள் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் டான் தொலைக்காட்சியினரையும் ஆஜராகுமாறு மாவட்ட நீதிமன்றம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்களின் நிதியுதவியுடன் சமாசமும் இணைந்து கைதடி நவீல்ட் பாடசாலைக்கு சமயல் உபகரணங்களையும், மாணவர்களுக்கு உணவுப் பொருள்களையும் வழங்குவதைக் காணலாம்.

# "உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

அருமைத்துரை கயல்விழியின் "உப்புக்காற்றில் மலர்ந்த மலர்கள்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இன்பர்சிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வே.விசுவலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினராக இலக்கிய ஆய்வாளர் இ.து.குலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வின் வரவேற்புரையினை கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் வே.செந்திவேலும், தொடக்கவுரையை வடமாகாண கராத்தே சங்கத் தலைவரும், யோகா பயிற்சி ஆசிரியருமான மா.இரத்தினசோதியும், ஆசியுரையை சைவப்புலவர் இரத்தின சபாபதி திருமாறன் குருக்கள், கந்தவனம் சூரியகுமாரன், சி.உதயகுமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலுக்கான ஆய்வுரையை சிதம்பரக் கல்லூரி ஆசிரியர் சோ.சிவனேஸ்வரன் வழங்க, மா.இரத்தினசோதி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்ளவுள்ளார். (மா,62)

# வீதிகள் செப்பனிடல்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதான வீதியில் மந்திகை சிலையடியிலிருந்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு இடையிலான வீதி செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

தும்பளை பிரதான வீதியிலிருந்து கிளைகளாகப் பிரிந்து செல்லும் வீதிகளில் ஒன்றான பிராமண வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது. (62)

# வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கு கடந்த வருடம் பெருமளவு நிதி பயன்பாடு

(வவுனியா)

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்காக 2 ஆயிரத்து 537 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுக்குக் கீழ் உள்ள 505 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்த நிதி, அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 118 கிலோமீற்றர் நீளமான பிரதான மற்றும் உள்ளூர் வீதியைப் புனரமைப்பதற்கு 85 மில்லியன் ரூபாவும், நெடுங்கேணி நீர்ப்பாசனக் குழாய் நீர் விநியோக அபிவிருத்திக்காக 25 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் மாமடுவ குளப் புனரமைப்பிற்காக 50 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் இந்தத் திட்டத்தின் மூலம் 205 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட தெப்பக்குளம் புனரமைப்புக்காக 20 மில்லியன் ரூபாவும் சிறிய மற்றும் நடுத்தரக குளங்கள் திருத்த வேலைக்காக 23 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 105 மில்லியன் ரூபாவும் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கல் மற்றும் கட்டடங்கள் அமைத்தல் போன்ற 29 திட்டங்களுக்கு 42 மில்லியன் ரூபா நிதியும் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா ஆதார வைத்தியசாலையின் நோய்ச்சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு 4.2 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதுடன், 170 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 220 கிராமங்களில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எருக்கலம்பிட்டியில் மீள்குடியேறிய மக்கள்
## எவ்வித அடிப்படை வசதிகளுமின்றித் தவிப்பு

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட எருக்கலம்பிட்டி கிராமத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக அம்மக்கள் கவலை தெரிவித்தனர்.

யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட இம் முஸ்லிம் மக்கள் புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர். சுமார் 700 குடும்பங்கள் தற்போது தமது சொந்த விருப்பத்தின் பேரில் மீண்டும் மன்னார் எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் மீள்குடியேறி வருகின்றனர்.

இவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் குறைந்தளவில் வழங்கப்படுவதுடன், மீள்குடியேறியோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை இதுவரை வழங்கப்படவில்லையென அம்மக்கள் தெரிவித்தனர்.

தற்போது இவர்களுக்குத் தங்குமிடப் பிரச்சினை நிலவி வருவதுடன், இவ்வாறு எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் மீள்குடியேறிய குடும்பங்கள் வீடுகள் இல்லாத நிலையில் உறவினர்கள் மற்றும் பாவனையற்ற வீடுகளிலும் தங்கியுள்ளனர். இவ்வீடுகளின் உரிமையாளர்கள் தங்களது வீடுகளை விட்டுத் தருமாறு கேட்டுள்ளதால் தாங்கள் தற்போது நிர்க்கதியான நிலையிலுள்ளதாக அம்மக்கள் கூறினர்.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் உட்பட்ட உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென அம்மக்கள் தெரிவித்தனர்.


# கல்விமாணிக் கற்கைக்கான கட்டணங்கள் திடீரென உயர்வு

(அச்சுவேலி)

தேசியக் கல்வி நிறுவகத்தினால் கல்விப்புலத்தில் உள்ளவர்களுக்காக நடாத்தப்படும் கல்விமாணிப் பட்டக்கற்கை நெறிக்கான கட்டணங்கள் யாவும் என்றுமில்லாதவாறு சடுதியாக உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2011/2013 ஆண்டுக்கான கல்விமாணிப் பட்டக்கற்கைக்கான பிரவேசப் பரீட்சைக் கட்டணம் 500 ரூபா, பதிவுக்கட்டணம் 1000 ரூபா, பாடநெறிக் கட்டணம் 30,000 ரூபா, பரீட்சைக்கட்டணம் 3,000 ரூபா என மொத்தம் 34,500 ரூபா அறவிடப்படவுள்ளது.

இம்முறை அறிவிக்கப்பட்டுள்ள இக்கட்டண விபரமானது கடந்த காலங்களில் அறவிடப்பட்ட கட்டணங்களை விட மிகவும் அதிகமானதாக அமைந்திருப்பதாக கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். (03)





அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் தைப்பூச உற்சவத்தின்போது முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் சிற்பத் திருமஞ்சத்தில் ஆரோகணிக்க எழுந்தருளுவதையும், திருமஞ்சத்தில் வீதியுலா வலம் வருவதையும் காணலாம். (03)

# உலர்மீன் அபிவிருத்தித்திட்டம் காரைநகரில் அமுல்படுத்தல்

(யாழ் நிருபர்)

காரைநகர் அம்பனைப் பகுதியில் உலர்மீன் அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்று வருடத்தில் அமுல் படுத்தப்படவுள்ள இத்திட்டம் WRDS ஊடாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை உள்ளடக்கியதாக அமுல்படுத்தப்படவுள்ளது.

அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் ஏற்படும் தாமதத்தால் இத்திட்டத்தை முன்னெடுப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக PARSIC அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

# கொடுப்பனவு சான்றுத்துண்டுகளுக்கு இலங்கை வங்கியில் கடும் தட்டுப்பாடு

(அச்சுவேலி)

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கற்கை நெறிகள் தொடர்பான கொடுப்பனவுகள்(பணம்) அனுப்புவதற்காக பயன்படுத்தப்படும் கொடுப்பனவு சான்றுத் துண்டுகளுக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கும் இலங்கை வங்கியில் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால் பணம் செலுத்துபவர்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் சான்றுத் துண்டுப் பிரதியினை போட்டோப்பிரதி எடுத்துவிட்டு, பெற்றுக்கொண்ட பிரதியினை மீள ஒப்படைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

வங்கியினால் இலவசமாக வழங் கப்படவேண்டிய இக் கொடுப்பனவுச் சான்றுத்துண்டுகளைத் தேவைப்படும் கல்வியாளர்கள் தமது பணத்தைச் செலவுசெய்தே பெறவேண்டிய நிலை காணப்படுவதை யாரிடம் தாம் முறையிடுவது என ஆதங்கப்படுகின்றனர். (03)

# திருமஞ்ச வீதியுலா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாண்டியன்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வைரவப் பெருமானுக்கு (108) அஷ்டோத்திர சதசங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து விசேட பூசைவழிபாடுகள் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சலும் நடைபெற்று வைரவப் பெருமான் திருமஞ்சத்தில் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் காலை 10.30 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது. (52)

# கைத்தொலைபேசி, வங்கிப் புத்தகத்தை தனியர் பேருந்தில் தொலைத்த பெண்கள்

(வேலணை)

ஊர்காவற்துறையிலிருந்து 780 பாதை இலக்க வீதியால் யாழ்ப்பாணத்தை நோககி வந்துகொண்டிருந்த சிற்றூர்தியில் பிரயாணத்தினை மேற்கொண்டிருந்த இரு இளம் பெண்கள், தங்களிடமிருந்த விலைமதிப்புள்ள கையடக்கத் தொலைபேசியையும், வங்கியில் பணவைப்புச் செய்துள்ள புத்தகத்தினையும் இழந்துள்ள சம்பவமொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றதாக ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

தனியார் சிற்றூர்தியில் புளியங்கூடலிலிருந்து இரண்டு இளம் பெண்கள் அன்றைய தினம் காலை 10 மணியளவில் இந்தச் சிற்றூர்தியில் ஏறிக் கொண்டதாகவும், சிற்றூர்தியில் அதிகளவில் மக்கள் நிறைந்திருந்ததாலும், ஆசனங்களிலும் இடமில்லாத காரணங்களாலும் இந்த இளம் பெண்கள் சிற்றூர்தியில் நின்றுகொண்டே பிரயாணத்தினைத் தொடர்ந்தனர்.

இதனைக் கவனித்த அந்தச் சிற்றூர்தியில் அமர்ந்திருந்த இராணுவவீரர்கள் இளம் பெண்களிடமிருந்த கைப்பையினை வாங்கித் தங்களின் பிரயாணப் பைகளுடன் சேர்த்து வைத்திருந்தனர்.

இதேநேரத்தில் சிற்றூர்தி வழி நெடுகிலும் பொதுமக்களை ஏற்றிக்கொண்டிருந்ததால், மக்களுடன் மக்களாக இரு பெண்களும் பின்நோக்கி நகர்த்தப்பட்டனர்.

இவ்வாறிருக்க சிற்றூர்தி யாழ்நகர் வந்தடைந்ததும் சகலரும் இறங்கிக் கொண்டனர். இராணுவ வீரர்களிடமிருந்த பெண்களின் கைப்பையும், இவர்களினது கைக்கு வந்து சேர்ந்தன.

இதன்பின்னர் இந்தப் பெண்கள் வேறு இடத்திற்குச் செல்வதற்குத் தயார் நிலையில் தங்களது கைப்பைகளைத் திறந்து கைத்தொலைபேசியினைத் தேடியபோது, அந்தத் தொலைபேசி இருக்கவில்லை.

உடனடியாகச் சிற்றூர்தி நடத்துநரை அணுகியபோதும் எதுவித பயனும் ஏற்படாத நிலையில், திரும்பி வீட்டிற்குச் சென்று அதன் பின் ஊர்காவற்துறைப் பொலிஸில் இச்சம்பவம் பற்றிப் புகார் செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (05)

# மத்திய கல்லூரியில் கல்விசார் போட்டிகள்

(கொக்குவில்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஒழுங்குசெய்துள்ள கல்விசார் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் முற்பகல் 9 மணியிலிருந்து பகல் 1 மணிவரை நடத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான கட்டுரைப் போட்டிகளும் தமிழ்மொழி மட்டிலான பொது அறிவு மற்றும் உளச்சார்புப் போட்டிகளும் அன்றைய தினம் நடத்தப்படவுள்ளதாகச் சமாச கல்விக்குழு அறிவித்துள்ளது.

கலந்துகொள்ள விண்ணப்பித்திருக்கும் போட்டியாளர்கள் காலை 8 மணிக்கு முன்பாக வருகை தந்து, கலந்துகொள்ளும் போட்டிகளை நிச்சயப்படுத்திக் கொள்ளுமாறு வேணடப்படுகின்றனர். (68)

## இன்றைய பலன்

(29.01.2011 சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
விகிர்தி தை 15
இராகுகாலம் 09.36- 11.06,
சுபநேரம் 3.36 -5.06,
தசமி,காலை 7.41, அனுசம் மு.ப.11.06, சித்தம்

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

- மேடம்:- நற்காரியம் செய்தல், களியாட்ட விருப்பு, உபதேசம் செய்தல்.
- ரிஷபம்:- ஆரோக்கியம், விசேட உணவு உண்ணல், களியாட்டம்.
- மிதுனம் :- சந்தோசப்படல், புகழுக்காக உதவி செய்தல், தனலாபம்.
- கடகம்:- கடன் வசூல், பணச் சேர்க்கை, பெண்களால் உதவி.
- சிம்மம்:- போசனசுகம், பெண்களால் உதவி, சயன சுகம்.
- கன்னி :-முயற்சிகளில் வெற்றி, மேலோர் பாராட்டு, தனச் சேர்க்கை.
- துலாம் :- மதிப்பு உயரல், எல்லோரும் உதவி, காரியம் ஜெயம்.
- விருச்சிகம்:- நினைத்தகாரியம் வெற்றி, நண்பர்கள் உதவி, இசைக்கொண்டாட்டம்.
- தனுசு:- தொழிலால் அதிகலாபம், பணச்சேர்க்கை, பெரியோர்மதிப்பு.
- மகரம்:- பிறருக்கு உதவி, மேலோர் பாராட்டு, காரியசித்தி.
- கும்பம் :- சந்தேகம் கொள்ளல், குடும்பத்தில் கலகம், மனைவி வழியால் தொல்லை.
- மீனம்:- அமைதியில் விருப்பம், போட்டிகளைத் தவிர்த்தல், சயன விரும்பம்.

# புலிகளின் 15 முக்கிய உறுப்பினர்களை பூஸாவில் தடுத்து விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பதினைந்து பேரை பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் பின் நாட்டின் பல பகுதிகளிலும் மறைந்திருந்த நிலையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசேட அணியினர் மேற்கொண்ட புலன்விசாரணைகளின் மூலம் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் உள்ளிட்ட பல கடும் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக இனம் காணப்பட்டுள்ள பதினைந்து பேரையே அவ்வாறு பூசாவில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் அவர்களுக்கெதிரான விசாரணைகள் தொடர்பான அறிக்கையொன்றை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தர விடப்பட்டுள்ளது.

# உணவுப்பொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எவ்விதமான தீர்வுத்திட்டமும் அரசிடம் இல்லை

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமென பிரசாரம் செய்துவரும் அமைச்சர்கள் அதனை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த தீர்வுத்திட்டங்களை முன்வைக்கத் தவறியுள்ளதாக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ் சேனசிங்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாத வகையில் உயர்வடைந்துள்ளன. முட்டை மற்றும் வெங்காயம் போன்ற பொருட்களின் விலையேற்றத்தைத் தடுப்பது எனத்தெரிவித்து அவை இறக்கமதி செய்யப்பட்ட போதிலும் பெருமளவில் விலை அதிகரித்துள்ள மரக்கறிகளின் விலைகளைக் குறைப்பது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விவசாயிகளும்,நுகர்வோரும் இந்த விலை அதிகரிப்பால் நெருக்கடிகளை எதிர்நோக்கும் அதேவேளை இடைத் தரகர்களாக செயற்படுவோர் பெருமளவில் கொள்ளை இலாபம் ஈட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆயுதக்குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோருகிறார் குரு முதல்வர்

(கொழும்பு)

வடக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் வண.விக்ரர் சூசை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் குருமடத்தைச் சேர்ந்த ஒருவரும் அவரது நண்பரும் ஆயுதக்குழுவொன்றினால் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டதை அடுத்தே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மன்னார் புனித சேவியர் தேசிய பாடசாலையின் மாணவர்களான இவர்கள் கடந்த வாரம் சாதாரண உடையில் இருந்தவர்களால் கடத்தப்பட்டு இரண்டு நாட்களாகக் காணாமற் போயிருந்தனர்.

இவர்கள் இருவரும் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தியே அவர்களிடம் விசாரணை செய்துள்ளனர்.

மன்னார் பிரதான வீதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த அவர்கள் பின்னர் நகருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இந்த ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அரசியல் நோக்கில் இயங்கும் ஆயுதக்குழுக்களே இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட மாணவர்களில் ஒருவரின் வீட்டுக்கு சாதாரண உடையில் சென்றுள்ள இருவர் அவரது மூத்த சகோதரன் குறித்து விசாரணை செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்படை பிரதித்தளபதி பதவி மூன்று பேர் போட்டியிடுகின்றனர்

SRI LANKA NAVY

(கொழும்பு)

கடற்படையின் பிரதித் தளபதி பதவிக்கு மூன்று பேர் போட்டியிடுவதன் காரணமாக கடற்படையினர் மத்தியில் பிளவுகள் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய கடற்படைத் தளபதி சோமதிலக்க திசாநாயக்க கடற்படைத் தளபதியாகப் பதவியேற்று இரண்டு வாரங்கள் கழிந்துள்ள நிலையிலும் அவர் முன் வகித்த கடற்படையின் பிரதித் தளபதி பதவிக்கு இதுவரை யாரும் நியமனம் செய்யப்படவில்லை.

அதன் காரணமாக தற்போதைக்கு கடற்படையின் ரியர் அட்மிரல் தரத்தில் உள்ள மூவருக்கு மத்தியில் அப்பதவி தொடர்பான போட்டியொன்று உருவாகியுள்ளது. சுசித் மாலிய பண்டார வீரசேகர,ஜயநாத் சிறிகுமார கொலம்பகே,ஜயந்த பெரேரா ஆகியோரே அவர்களாவர்.

அவர்களில் சுசித் வீரசேகர தற்போதைக்கு பிரதித் தலைமை அலுவலராகவும், வடக்குப் பிரதேச கடற்படைக் கட்டளைத் தளபதியாகவும் கடமையாற்றுகின்றார். கொலம்பகே கிழக்குப்பிராந்திய கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றுகின்றார். ஜயந்த பெரேரா கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளராக இருக்கின்றார். இவர்களில் சுசித் வீரசேகரவே தற்போதைய நிலையில் கடற்படையின் பிரதித் தளபதிக்கான சேவை மூப்பில் முன்னணியில் இருக்கின்றார்.

ஆயினும் பாதுகாப்புச் செயலாளரின் ஆசியுடன் ஏனைய இருவரும் அந்தப் பதவியைப் பிடித்துவிடுவதற்காக மேற்கொண்டுள்ள உள்வீட்டுச் சண்டை காரணமாக கடற்படைக்குள் தற்போது பிளவுகள் அதிகரித்து வருவதாக அதன் உள்வீட்டுத் தகவல்களிலிருந்து தெரிய வருகின்றது.

# தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் சாதனை படைக்கும் அளவில் அதிகரிப்பு



(கொழும்பு)

நாட்டில் கடந்த வருடத்தில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் சாதனை படைக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளன. தேயிலை உற்பத்தி 14 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்நிலையில் தேயிலை உற்பத்தியின் மூலம் மட்டும் கடந்த வருடத்தில் 150 பில்லியன் ரூபாவை அந்நிய செலாவணியாகப் பெற்றுக்கொண்டுள்ளோம் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, கடந்த 2010 ஆம் ஆண்டில் 329 மில்லியன் கிலோகிராம் தேயிலை நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 14 வீதமான அதிகரிப்பாகும். மேலும் கடந்த வருடம் தேயிலை உற்பத்தி காரணமாக 150 பில்லியன் ரூபா அந்நிய செலாவணி கிடைத்துள்ளது. உண்மையிலேயே தேயிலை உற்பத்தி அதிகரிப்பைப் பொறுத்தவரை அதுவொரு சாதனை அதிகரிப்பாகும். நாட்டில் தேயிலை உற்பத்தியில் 76 வீதமானது சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களினால் பங்களிப்பு செய்யப்படுகின்றது. எஞ்சிய 24 வீதமே தேயிலை தோட்டக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்றது. நாட்டில் சுமார் 4 இலட்சம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு எதிர்காலத்தில் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை தேயிலைக் கொழுந்து ஒரு கிலோவின் விலையானது 30 ரூபாவாகவே காணப்பட்டது. ஆனால் 2009 ஆம் ஆண்டு 60 ரூபாவாகவும் கடந்த வருடம் 65 ரூபாவாகவும் உயர்வடைந்தது.

மேலும் தேயிலை உற்பத்தியின் தரத்தை நாங்கள் குறைக்கவில்லை. அதனை அதிகரித்துள்ளோம். மேலும் உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு அதிக விலையைப் பெறுகின்றோம். எமது நாட்டின் தேயிலைக்கான கேள்வி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

நாட்டில் தேயிலைத் தோட்டக கம்பனிகள் உள்ளன. அந்த நிறுவனங்களில் அதிகமானவற்றில் காணிகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அவ்வாறு பயன்படுத்தப்படாமல் உள்ள காணிகளைப் பயன்படுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு 6 மாதகாலம் அவகாசம் வழங்கியுள்ளோம். எதிர்வரும் ஜூன் மாதத்துடன் கால அவகாசம் முடிகின்றது.

அதற்கிடையில் அவர்கள் காணிகளை அடையாளம் கண்டு பயன்படுத்தாவிடின் அப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் அந்தக் காணிகளை வழங்கிவிடுவோம். ஒருவருக்கு குறைந்த பட்சம் 2 ஏக்கர்களாவது வழங்கப்படும். அது தொடர்பான ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# சமுர்த்தி உதவித்தொகை ஜனவரி முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு நிதி உதவித்தொகை இவ்வருடம் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் உதவித்தொகை இதுவரைக்கும் பிரசவத்திற்கென 2 ஆயிரத்து 500 ரூபாவாக வழங்கப்பட்டுவந்ததுடன் இத்தொகை 2ஆவது பிரவசத்தின் போதும் வழங்கப்பட்டது.


எனினும் இத்தொகை ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதலாவது மற்றும் இரண்டாவது பிரவசத்தின் போது சமுர்த்திப் பயனாளிகள் தலா ஐயாயிரம் ரூபாவை பெற்றுக்கொள்ளமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.




இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்று கொழும்பில் அமைந்துள்ள வங்கியின் பிரதான அலுவலகத்தின் முன்னால் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. 1996ஆம் ஆண்டின் பின்னர் வங்கிச்சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்காக ஓய்வூதியக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 19 அரச மற்றும் தனியார் வங்கிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது.

## எர்வின் விலகல்



(ஹராரே)

உலகக் கிண்ண அணியில் இருந்து சிம்பாப்வே அணியின் சகலதுறை வீரர் எர்வின், தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின் "பி" பிரிவில் இடம் பெற்றுள்ள சிம்பாப்வே அணி, தனது முதல் போட்டியில் (பிப்., 21) அவுஸ்ரேலியாவை எதிர்த்து விளையாடுகிறது. ஏழு ஆண்டுகளாக இங்கிலாந்து கழகப் போட்டிகளில் பங்கேற்று வந்த எர்வின், அங்கிருந்து விலகி, சில நாட்களுக்கு முன்பு தான் சிம்பாப்வே அணியில் இடம் பெற்றார். தற்போது எர்வின் திடீரென விலகியுள்ளார். இவருக்குப் பதிலாக மவோயா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## சமநிலையில் முடிவடைந்த கல்லூரி அணிகள் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவின் 'பிரிவு இரண்டு'க்கான போட்டியே வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டி இனிங்ஸ் போட்டியாகும்.

இப்போட்டி கடந்த 26, 27ஆம் திகதிகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பண்டாரநாயக்க கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிளிங்டன் 44, ரியூடர் 30, லிவிங்டன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஜயசூரிய ஐந்து, லக்குறுவன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய பண்டாரநாயக்கக் கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துலதுங்க 39, மிகிறான், ஆராய்ச்சி ஆகியோர் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர்.




பந்து வீச்சில் அஜித் டர்வின் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எட்டு ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 17, கிளிங்டன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பண்டார மூன்று, விதன அபேவர்த்தன இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய பண்டாரநாயக்க கல்லூரி அணி, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் மிகிரான் 28, சமேதன 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிளிங்டன், லிவிங்டன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. (எஸ்)

## பாகிஸ்தான் தலைவராக தொடர்ந்தும் அப்ரிடியே



(இஸ்லாமாபாத்)

உலகக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியின் தலைவராக அப்ரிடியே செயற்படுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட் அப்ரிடியை தலைவராக நியமிப்பதற்கு விரும்பவில்லை. மிஸ்பா-உல்-ஹக்கை தலைவராக நியமிக்கவே விரும்பினார். இதே போல யூனுஸ்கானும், மிஸ்பாவுக்கு ஆதரவாக இருந்தார்.

இந்த நேரத்தில் அப்ரிடியைத் தலைவராகத் தொடர்ந்து நியமிக்காவிட்டால் அணியில் சிக்கல் ஏற்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதியது. இதனால் அப்ரிடியை தொடர்ந்து தலைவராக நீடிக்கச் செய்வது என்று முடிவு செய்யப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

## உலகக் கிண்ண கிரிக்கெட் அதிகாரபூர்வ இணையம்

International Cricket Council

(டுபாய்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக சர்வதேச கிரிக்கெட் சபை யாகூ, இந்தியா ஆகியவை இணைந்து அதிகாரபூர்வ இணையத்தளத்தை தொடங்குகிறது.

iccevents.yahoo.com என்ற பெயரில் இந்த இணையத்தளம் தொடங்கப்படுகிறது.

கிரிக்கெட் போட்டிகள் மற்றும் அது தொடர்பான தகவல்கள், ஆட்டம் நடைபெறும்போது அதுதொடர்பான விபரங்கள், வீடியோக் காட்சிகள் உள்ளிட்ட விபரங்களை இந்த இணையத்தளத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இணையத்தளம் மூலம் கேப், டி சர்ட் உள்ளிட்ட பொருட்களையும் வாங்கிக்கொள்ளலாம். இந்தத் தகவல்களை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## மாற்று விக்கெட் காப்பாளர் தேர்வின்மை டோனிக்கு நெருக்கடியைக் கொடுக்கும்

### என்கிறார் கங்குலி



(கொல்கத்தா)

உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில், மாற்று விக்கெட் காப்பாளர் தேர்வு செய்யப்படாததால், போட்டியின் போது டோனிக்கு நெருக்கடி ஏற்படலாம் என, முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில், திறமையான இளம் மற்றும் அனுபவ வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனவே இம்முறை இந்திய அணி கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது. தவிர, உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு போட்டியில் சாதிக்கக் கைகொடுக்கும். ஒருவேளை கிண்ணத்தை வெல்லத் தவறினாலும், ரசிகர்களின் ஆதரவு தொடர்ந்து இந்திய அணிக்குக் கிடைக்கும்.

சமீபத்தில், நான்காவது ஐ.பி.எல்., ரி-20 தொடரில் கொச்சி அணி சார்பில் விளையாட, அந்த அணி நிர்வாகம் என்னை அணுகியதாக செய்திகள் வெளியாகின. ஆனால் இதுவரை எந்த ஒரு ஐ.பி.எல்., அணியும் என்னை அணுகவில்லை என்றார்.

## யுவராஜ், பதானின் ஆட்டமே கிண்ணத்தைப்பெற உதவும்



(மும்பை)

கடந்த 28 ஆண்டுகளுக்குப் பின், உலகக் கிண்ணத்தை வெல்லும் திறமையுடைய அணியை இந்தியா பெற்றுள்ளது. ஆனால் இது அதிரடி வீரர் யுவராஜ் சிங், சகலதுறை வீரர் யூசுப் பதான் ஆட்டத்தைப் பொறுத்து அமையும் என, இந்திய அணியின் முன்னாள் தலைவர் வெங்சர்க்கார் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்போதைய அணியில் சச்சின், சேவாக், கம்பிர், யுவராஜ் சிங், யூசுப் பதான் என, முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் நல்ல ஆட்டத்திறனுடன் உள்ளனர். அதிரடி வீரர்களான யுவராஜ் சிங் அல்லது யூசுப் பதான் இருவரில் ஒருவர், இந்திய அணிக்கு முக்கிய ஆயுதமாக இருப்பார்கள். இந்தியா கிண்ணத்தை வெல்வது இவர்கள் கையில்தான் உள்ளது. இவர்கள் ஜொலிக்கும் பட்சத்தில் கிண்ணத்தை வெல்வது எளிதாகும்.

இந்தியாவில் உள்ள ஆடுகளங்கள் கடந்த மார்ச் மாதம் முதல், வெயிலில் நன்கு காய்ந்து உலர்ந்து கிடக்கிறது. இதனால், ஆடுகளம் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களுக்கு நன்கு சாதகமாக இருக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

## இலங்கை அணி அறிவிப்பு




(கொழும்பு)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடருக்கான இலங்கை அணி, இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உலகக் கிண்ணத் தொடருக்கு அறிவிக்கப்பட்ட அணியே மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதும் என்றும், இது வீரர்களுக்கு நல்ல அனுபவங்களைக் கொடுக்கும் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அணி விபரம் வருமாறு: குமார் சங்கக்கார (அணித் தலைவர்), மஹேல ஜெயவர்த்தன (துணைத் தலைவர்), டில்சான், உப்புல் தரங்க, டிலான் சமரவீர, சமர சில்வா, கப்புக்கெதர, அஞ்சலோ மத்தியூஸ், திசர பெரேரா, நுவான் குலசேகர, லசித் மலிங்க, டில்கார பெர்னாண்டோ, முரளிதரன், அஜந்த மெண்டிஸ், ரங்கண ஹேரத்.

## மாற்றம் என்ற பேச்சிற்கே இடமில்லை



(புதுடில்லி)

குறிப்பிட்ட திகதியில் போட்டியை நடத்த நாங்கள் தயாராகி விடுவோம். இதில் மாற்றம் என்ற பேச்சிற்கே இடமில்லை. இவ்வாறு பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் இணைச் செயலர் பிஸ்வரப் தே தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த முடிவு குறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது. இந்நிலையில் போட்டியை மாற்றுவது என்ற முடிவை, அவர்கள் ஏன் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. இது தொடர்பாக ஐ.சி.சி., யிடம் இருந்து எங்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை என்றார்.

## இந்திய அணிக்கு அதிக வாய்ப்பு



(ஜோகன்னஸ்பேர்க்)

உலகக் கிண்ணத்தை வெல்ல இந்தியாவுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக தென்னாபிரிக்க தலைவர் ஸ்மித் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்த வரை போட்டியை நடத்தும் நாட்டுக்கு உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறேன். இந்திய துணைக் கண்டத்தில் உள்ள நாடுகளில் அந்தந்த அணிகள் சிறப்பாக விளையாடக் கூடியது. இதனால் இந்தியாவுக்குத் தான் உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறேன் என்றார்.

# பிரிட்டன் அரசாங்கத்தின் நிதிக்குறைப்பினால் 650 ஊழியர்களை பணி நீக்குகிறது பி.பி.சி




(லண்டன்)

பிரித்தானிய அரசாங்கத்தின் நிதியுதவி குறைக்கப் பட்டதால் பி.பி.சி உலக சேவை நிறுவனம் தனது சேவைகளிலும் ஊழியர்களின் எண்ணிக்கையிலும் பெரும் குறைப்பை அறிவித்துள்ளது.

2400 ஊழியர்களைக் கொண்ட இந்நிறுவனத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளில் 650 பேர் வேலையிழப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செர்பிய சேவை, அல்பேனிய சேவை, மாசிடோனிய பிரிவுகள் சேவை, ஆப்ரிக்காவுக்கான போர்த்து கீசிய மொழிப் பிரிவு மற்றும் கரீபியன் தீவுகளுக்கான ஆங்கில மொழிச் சேவை ஆகிய ஐந்து மொழிப் பிரிவுகள் முழுமையாக மூடப்படுகின்றன.

இது தவிர சீன மொழியான மாண்டரின் ரஷ்யா வியட்நாமிய மொழி என வேறு பல மொழிப் பிரிவுகளில் வானொலிச் சேவை மட்டும் மூடப்படுகிறது. ஆனால் இந்த மொழிப் பிரிவுகளில் இணையத் தள மற்றும் கைத் தொலைபேசி மூலம் சேவைகள் தொடரும்.

அதேபோல சிற்றலை ஒலிபரப்புகளும் கடுமையாகக் குறைக்கப்படும்.

இந்திய மொழியான ஹிந்தியில் சிற்றலை ஒலிபரப்புகள் இந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறுத்தப்படும்.

ஆனால் பண்பலை ஒலிபரப்புகள் ஊடாக ஹிந்தி சேவையின் நிகழ்ச்சி நீடிக்கும்.

இந்த ஆண்டு தனது 70 ஆவது ஆண்டு நிறைவை எட்டும் தமிழோசையைப் பொறுத்த வரை அதற்கு அளிக்கப்பட்டுவரும் நிதியில் அடுத்த மூன்றாண்டு காலகட்டத்தில் 10 சத வீதம் சிக்கன சேமிப்பு என்ற இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இலக்கு காரணமாக தமிழோசையில் பணிபுரிவோர் எண்ணிக்கை ஒலிபரப்பு நேரம் மற்றும் ஒலிபரப்புத் தன்மை போன்றவற்றில் சில மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால் தமிழோசையின் சேவையில் எந்த ஒரு மாற்றமும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பி.பி.சி உலகசேவை நிறுவனம் 30 மொழிகளிலுல் வானொலி ஒலிபரப்புச் செய்துவந்தது குறிப்பிடத்தக்கது.

# நெல்சன் மண்டேலா வைத்தியசாலையில்



(கேப்டவுன்)

தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா(92) உடல் நலமில்லாமல் ஆஸ்பத்திரியில் .அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஜோஹன்னஸ்பர்க் நகரில் உள்ள மில்பார்க் ஆஸ்பத்திரிக்கு வழக்கமான உடற்பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது தான அவருக்கு சுவாசக் குறைபாடு இருப்பது தெரியவந்தது.

இதற்குச் சிகிச்சை அளிப்பதற்காக அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது தெரியவந்ததும் வதந்திகள் கிளம்பின. இதைத் தொடர்ந்து அவர் சார்ந்து இருக்கும் ஆளும் கட்சியான ஆப்பிரிக்கன் தேசிய காங்கிரஸ் கட்சி அமைதி காக்கும்படியும் பீதி 'அடையவேண்டாம் என்றும் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

பிந்திக்கிடைத்த தகவலி அடிப்படையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நெலசன் மண்டேலா அங்கிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரியவருகிறது.

# பயணிகள் கப்பலில் தீ ஏழு பேர் பலியாகினர்

இந்தோனேசியாவில் பயணிகள் கப்பல் ஒன்று நேற்று அதிகாலை தீப்பிடித்ததில் 7 பேர் உயிரிழந்தனர்.

கப்பல் தீப்பிடித்ததும் அதில் இருந்து 100க்கும் மேற்பட்ட பயணிகள் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்டனர். எனினும் மேலும் ஏராளமானோர் கப்பலுக்குள் சிக்கியுள்ளனர்.

அவர்களின் நிலை குறித்துத் தெரியவில்லை என போக்குவரத்து அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் பாம்பங் எர்வான் தெரிவித்தார்.

கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கும் மற்றும் மீட்புப் பணிக்கும் 5 கப்பல்கள் சென்றுள்ளன. இறந்த 7 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன.

ஜாவா தீவிலிருந்து அருகில் உள்ள சுமாத்திராவுக்கு அந்தக் கப்பல் சென்றுகொண்டிருந்த போது இந்தோனேசிய நேரப்படி அதிகாலை 3 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

# விக்கிலீக்ஸ் இணையத்தலம் மூலம் சர்வதேச உறவுகள் வலுப்பெற்றன



காட்டிக்கொடுக்கும் விக்கிலீக்ஸின் இணையதளத்தால் சர்வதேச உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளன என்று ரஷய அதிபர் டிமெட்ரி மித்வடே கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு விக்கிலீக்ஸ் இணையதளமானது ஈராக், ஆப்கான் ஆகிய நாடுகளுடனான அமெரிக்காவின், போர் குறித்த ரகசிய ஆவணங்களை வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பை உண்டாக்கியது. இதன் நிறுவுனர் ஜூலியன் அசேஞ்ச் சர்வதேச அளவில் பிரபலமானார்.

இந்நிலையில் சுவிற்சர்லாந்தில் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மாநாடு நடந்து வருகிறது. இதில் கலந்து கொண்டு பேசிய ரஷ்ய அதிபர் டிமெட்ரிமித்வடே கூறிய நாவது-

விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்ட ரகசிய ஆவணங்களால் சில நாடுகள் கடு விமர்சனம் செய்து வருகின்றன.

ஆனால், விக்கிலீக்ஸினால் சர்வதேச உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளன. இது சர்வதேச அளவில் பொது அரசியல் இணையதளமாக உள்ளது.

இன்று பலகோடி மக்கள் இணைய தளத்தினை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் விக்கி லீக்ஸ் சர்வதேச நாடுகளிடையேயான உறவில் நல்ல செல்வாக்கினைப் பெருக்கியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

# பல்வேறு இழுபறிகளின் பின்னர் ஆப்கான் நாடாளுமன்றம் கூடியது



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் நாடாளுமன்றக் கூட்டம் நேற்று முன் தினம் தொடங்கியது. ஜனாதிபதி ஹமீத் கர்சாய் முறைப்படி நாடாளுமன்றக் கூட்டத்தை ஆரம்பித்து தொடக்க உரையை நிகழ்த்தினார்.

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்திற்கு கடந்த செப்டம்பர் மாதம் தேர்தல் நடந்தது. மொத்தம் 249 உறுப்பினர்கள் கொணட கீழ்சபைக்கு நடந்த தேர்தலில் ஏராளமான முறைகேடுகள் நடந்ததாகப் புகார் எழுந்தது.

இது தொடர்பாக அரசியல் சாசன தீர்ப்பாயத்தில் முறையீடு செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையிலுள்ளது.

இந்நிலையில் பலத்த சர்ச்சைகளுக்கு நடுவில் நாடாளுமன்றக் கூட்டம் தலைநகர் காபூலில் கூடியது. ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

அவர் பேசுகையில், அரசியலமைப்பு சாசனப்படி தெரிவு செய்யப்பட்டுள்ள எம்.பி.க்களுக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து பல்வேறு கேள்விகள் எழும்புகின்றன. இதற்குப் பதில் சொல்லும் நேரம் வந்துவிட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக குர்ஆனில் கூறப்பட்டுள்ள வாசகங்கள் அடங்கிய தேசிய கீதம் நாடாளுமன்றில் ஒலிக்கப்பட்டு . பின்னர் ஒவ்வொரு எம்.பி.க்களும் அதிபர் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டனர்.

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 53 பேர் பலி, பலர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் வாபஸ் பெறவுள்ளன. இந்த நிலையில், அங்கு தற்போது குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நடந்த 4 குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 200 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக இத் தாக்குதல்கள் ஷியா பிரி




வினர் வாழும் பகுதியில் தான் அதிகம் நடைபெறுகிறது. சமீபத்தில் பாக்தாத் நகரில் ஷியா பிரிவினர்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதில் பலியானவர்களுக்கு நேற்றுமுன்தினம் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அப்போது இறுதிச் சடங்கு நடந்துகொண்டிருந்த இடத்தில் தீவிரவாதிகள் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் அப்பகுதி முழுவதும் கரும் புகையுடன் தீப்பிடித்து எரிந்தது. இச் சம்பவத்தில் 48 பேர் உயிரிழந்தனர்.

பலர் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



# சூடானின் தனிநாட்டுக் கோரிக்கை பெப்ரவரி 7 இல் முடிவு தெரியவரும்

ஆபிரிக்க நாடான சூடான் இரண்டாக பிரிக்கப்படுவது குறித்த மக்கள் வாக்கெடுப்பு முடிவுகள் பெப்ரவரி 7 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் கடந்த 20 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபின் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தின்படி சூடானை தெற்கு, வடக்கு என இரண்டாக பிரிக்க முடிவு செய்யப்பட்டது.

பின்னர் நிகழ்ந்த பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு கடந்த ஜனவரி மாதம் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முன்னதாக சூடானை இரண்டாகப் பிரிக்கலாமா, வேணடாமா என வாக்கெடுப்பு நடந்தது. இதில் பெரும்பாலான மக்கள் சூடானை பிரிக்க ஆதரவு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தெற்கு சூடான் மக்கள் வாக்கெடுப்பு கமிஷன் அமைக்கப்பட்டது. இந்தக் கமிஷன் கடந்த ஜனவரி மாதம் வாக்கெடுப்பு நடத்தியது. இந்நிலையில், வாக்கெடுப்பு முடிவுகள் பெப்ரவரி 7ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவுள்ளன.

இதன்படி தெற்கு சூடானின் தலைநகரமாக கார்டூம் , வடக்கு சூடானின் தலைநகரமாக ஜூபாவும் முறையாக அறிவிக்கப்படும். இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 14 ஆம் தேதி இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டு அன்று முதல் தெற்கு சூடான் என்ற சுதந்திர நாடு உதயமாகும்.

# புலிகள் மீதான தடை நீக்கம்

## வை.கோ.வின் மனுவைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசு பதில் மனுத் தாக்கல் செய்தது



(சென்னை)

புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்து தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து வை.கோ. தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று உயர் நீதிமன்றில் மத்திய அரசு பதில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

புலிகள் இயக்கத்தைத் தடை விதித்து மத்திய அரசு கடந்த 14.5.2010 அன்று அறிவிப்பாணை வெளியிட்டது. இது தொடர்பாக உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டது.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்து மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை உறுதி செய்து 12.11.2010 அன்று தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ. மனுத்தாக்கல் செய்தார். தலைமை நீதிபதி எம்.இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் முன்னிலையில் கடந்த 27 ஆம் திகதியன்று இந்த மனு விசாரணைக்கு வந்தது.

நீதிபதிகள் முன்பு வை.கோ. ஆஜரானார். வை.கோ.வின் மனுவுக்கு மத்திய அரசின் உள்துறை சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் பதில் மனுத்தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாத நடவடிக்கைகள் தடைச்சட்டத்தின்படி விசாரணை நடத்தி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டத்தால் வை.கோவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

இந்தச் சட்டத்தால் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதை ஆதாரத்துடன் நிரூபித்தால் மட்டும்தான் அதை ஏற்க முடியும். அப்படி நிரூபிக்காவிட்டால் அவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்கக்கூடாது.

ஒருவேளை அந்தச் சட்டத்தால் அவருக்கு பாதிப்பு ஏற்பட்டது உண்மை என்று எடுத்துக்கொண்டாலும், மத்திய அரசு சட்டத்தின் மூலம் புதுடெல்லியில் அந்தத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு இருப்பதால், இங்கு அதற்கான நிவாரணத்தைத் தேட முடியாது. எனவே வை.கோவின் மனு தகுதியானதல்ல என்று அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வழக்கின் விசாரணையை பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

## எந்தத் தவறும் செய்யாமல் சிறப்பான ஆட்சி நடத்துவேன்

### என்கிறார் முதல்வர் எடியூரப்பா



(கர்நாடகம்)

இனி எந்தத் தவறும் செய்யமாட்டேன், அனைவரின் நம்பிக்கையையும் பெற்றுச் சிறப்பான ஆட்சி நடத்துவேன் என, கர்நாடக முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

மைசூரில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் எடியூரப்பா மேலும் தெரிவிக்கையில்:-

நான் பல தவறுகளைச் செய்துவிட்டதாக உணர்கிறேன். இனி எந்தத் தவறும் செய்யமாட்டேன். எல்லோரின் நம்பிக்கையையும் பெற்று, மக்களின் எதிர்பார்ப்புகளுக்குத் தகுந்தவாறு சிறப்பான ஆட்சி நடத்துவேன்.

அரசியல் சதியாட்டத்தால் உடலும், உள்ளமும் குன்றியுள்ளது. மன அமைதி பெறுவதற்காகக் கோயில்களுக்குச் செல்ல வேண்டுமென நினைப்பேன். வேலைப்பளு காரணமாக நேரம் ஒதுக்க முடியவில்லை. உலக நன்மைக்காக வேள்வி நடத்தப்படுவதை அறிந்து, இங்கு வந்துள்ளேன். இப்போது மனம் அமைதி அடைந்துள்ளது.

அந்தக் காலத்தில் அரசர்களுக்கு ஆலோசனை வழங்க ராஜகுருக்கள் இருந்தார்கள். இந்தக் காலத்தில் அப்படி யாரும் இல்லாததால், சுவாமிகளைத் தரிசித்து ஆலோசனை பெற்று வருகிறேன் என்றார்.

## இலங்கைத் தூதரகம் நோக்கிப் பேரணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கைது

(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் நோக்கிப் பேரணியாகச் சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர். அவர்கள் உயிருக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பின்மை தொடர்கிறது.

எனவே, மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு இலங்கை அரசை நிர்ப்பந்திக்கவும், தமிழக மீனவர்கள் உயிரைப் பாதுகாக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கக்கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் நோக்கிப் பேரணி நடத்தினர்.

இந்தப் பேரணியைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் உட்பட 100 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

## தமிழக மீனவர் படுகொலை குறித்து விவாதிக்க வருகின்றார் நிருபமாராவ்



(புதுடில்லி)

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக விவாதிக்க இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமாராவ் இன்று கொழும்பு வருகிறார்.

மீனவர்கள் கொல்லப்படுவது தொடர்பாக விவாதிக்க இன்று இலங்கை செல்லுமாறு நிருபமாராவை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கேட்டுக்கொண்டதாகத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒரு மாத காலத்தில் 2 மீனவர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக இந்தியா ஏற்கனவே கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாதது, மிகவும் கடுமையானது, துப்பாக்கிச்சூடு நடத்துவதை இலங்கைக் கடற்படை தவிர்க்க வேண்டும் என இந்தியா சார்பில் தெரிவிக்கப்பட்டது. மீனவர்களை இலங்கை இராணுவம் தாக்கவில்லை என அந்நாடு பதில் அளித்தது. இந்த நிலையில் இதுகுறித்து நேரில் விவாதிக்க நிருபமாராவ் இன்று கொழும்பு வருகைதரவுள்ளார்.




## இலங்கை அகதி தீக்குளித்து தற்கொலை

(மதுரை)

மதுரையில் இலங்கை அகதி ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

மதுரை கூடல்புதூர் அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர் செல்வராஜ் (38). இவர் கடந்த 24ஆம் திகதி தீக்குளித்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இவர் குடும்பப் பிரச்சினையால் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்து கூடல்புதூர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையே இரகசிய ஒப்பந்தம் என்கிறது பாரதிய ஜனதா

(சென்னை)

தமிழக மீனவர்கள், தொடர்ந்து இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொலலப்படுகின்றனர். அதைத் தடுக்க, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கை அரசின் துணிச்சலைப் பார்க்கும்போது, இந்திய அரசுக்கும், இலங்கைக்கும் மறைமுக ஒப்பந்தம் ஏதேனும் உள்ளதோ எனத் தோன்றுகிறது என, சென்னையில் செய்தியாளர்களிடம் தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழக மக்களுக்குத் துரோகம் செய்த தி.மு.க. அரசை வீழ்த்த, எதிர்க்கட்சிகள் ஓர் அணியில் திரள வேண்டும். ஆனால், தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் எதிர்காலம் பற்றித்தான் யோசிக்கின்றனவே தவிர, மக்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. தமிழக அரசியல் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியை, அ.தி.மு.க. செய்ய வேண்டும். மூன்றாவது அணி அமைக்கும் முயற்சியில் பா.ஜ.க ஈடுபடாது. கூட்டணி பற்றி வரும் முதலாம் திகதிக்குப் பிறகு முடிவெடுக்கப்படும் என்றார்.

## செங்கல்பட்டு முகாமிலுள்ள அகதிகளின் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போர்

(செங்கல்பட்டு)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், எனவே அவர்களை விடுதலை செய்யக்கோரி அங்குள்ள அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள அகதிகள் சிலர் கூறியதாவது:-

எங்களை நம்பியுள்ள பிள்ளைகள் உட்பட குடும்பத்தினர் அனைவரும் எந்த வித வாழ்வாதாரச் சூழ்நிலைகளும் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறோம். அதனால் எங்களது உடல்நிலை பாதித்ததுடன் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகி இருக்கிறோம். முகாமில் உள்ள பாதிப்பேருக்கு வழக்குகள் எதுவும் இல்லாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

மீதிப்பேரில் சிறு, சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்டு முன் பிணையில் வந்தவர்களை, மீண்டும் கைது செய்து முகாமில் அடைத்துள்ளார்கள். அவர்களது குடும்பத்தினர் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே, விடுதலைகோரி வியாழக்கிழமை முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியுள்ளோம். இந்தப் போராட்டம், அரசுக்கோ, அரசு அதிகாரிகளுக்கோ எதிரானது அல்ல என்று தெரிவித்தனர்.

# பேச்சுக்களின் பங்காளராக மீண்டும் எரிக் சொல்ஹெய்ம்



**இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் இடையில் 'பேச்சுக்களின் பங்காளர்' [dialogue partner] என்ற புதிய பொறுப்பினை வகிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக இலங்கைக்கான முன்னாள் சிறப்புத் தூதுவரும் நோர்வே நாட்டினது அமைச்சருமான எரிக் சொல்கெய்ம் கூறுகிறார்.**

**வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையினர் எனச் சொல்கெய்ம் குறிப்பிட்டது புலம்பெயர் நாடுகளில் வசித்து வரும் தமிழர்களையும் அவர்கள் அமைத்திருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசினையுமே குறிக்கிறது.**

**தான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே எப்போதும் செயற்பட்டு வந்ததாகச் இலங்கை தன்னை அடிக்கடி குற்றம் சுமத்தியதாகவும், ஆனால் அண்மையில் வெளிவந்திருக்கும் விக்கிலீக்சினது தகவல் இந்தக் கூற்றில் உண்மை எதுவும் இல்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது என 'நியூஸ் நவ்' [News Now.lk] என்ற ஆங்கில செய்தி இணையத்தளத்தினது ஆசிரியர் ஈஸ்வரன் ரட்ணத்திற்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.**

**தான் எந்தத் தரப்பினருக்கும் ஆதரவாகச் செயற்படவில்லை என்பதனை விக்கிலீக்ஸ்சினது அம்பலம் உறுதிப்படுத்தியிருக்கிறது என்றார் அவர்.**

**இலங்கையில் தமிழர்களுக்குத் 'தனித்தாயகம் என்ற கருத்துருவினை முற்றாக மறுத்த சொல்கெய்ம் புலம்பெயர்வாழ் தமிழர்கள் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு முன்வரவேண்டும் என்றும் தங்களது இலக்கு எதுவோ அதனை அடைவதற்கு இராஜதந்திர வழிவகைகளையே பின்பற்றவேண்டும் என்றும் கூறினார்.**

**அமைச்சர் சொல்கெய்மிடம் தொடுக்கப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும் இங்கு தரப்படுகின்றன:**

**கேள்வி:** விரைவில் இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளும் எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா?

**பதில்:** இலங்கையினது ஊடகங்கள் வாயிலாக நீங்கள் அறிவதைப் போல கடந்த ஆண்டு இதுபோன்றதொரு பயணத்தின் வாய்ப்புத் தொடர்பாக அதிபர் ராஜபக்சவுடன் உரையாடியிருந்தேன். ஆனால் பயணத் திகதி தொடர்பான இறுதி முடிவெதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

**கேள்வி:** இலங்கையிலுள்ள பல அரசியல் கட்சிகளும் உங்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராகவே பார்த்து வருகின்றன. போர் இடம் பெற்ற காலம் முதல் தங்கள் தொடர்பான இது போன்ற பார்வை நிலவி வருகிறது. தற்போது விடுதலைப் புலிகள் அழிக்கப்பட, போரும் முடிவுக்கு வந்து விட்டது. இந்த நிலையில் நீங்கள் ஒரு விடுதலைப் புலிகளின் அனுதாபி என்ற பார்வையினை மாற்றும் வகையில் இலங்கையுடனான உறவுகளைப் பலப்படுத்தும் ஏதாவது எண்ணம் உங்களிடம் இருக்கிறதா?

**பதில்:** எனது முன்னுரிமைப் பட்டியலில் எப்போதும் இலங்கை இருக்கிறது. உண்மையினைக் கூறப்போனால் நான் இலங்கைக்கு ஆதரவானவன். அமைதி முயற்சிகளில் ஏற்பாட்டாளராகப் பணியாற்றுமாறு இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கோரிக்கை விடுத்திருந்தனர். நோர்வே இந்தப் பணியில் இருக்கவேண்டும் என இரண்டு தரப்பினரும் விரும்பும் நாள்வரை நாங்கள் ஏற்பாட்டாளர்களாக இருக்கிறோம் என நாம் உறுதியளித்திருந்தோம்.

தொடர்புடைய சமூகங்களுடன் நாங்கள் சிறந்த உறவினைக் கொண்டிருந்தமையினால்தான் நாங்கள் இந்தப் பணிக்காக அழைக்கப்பட்டோம். குறிப்பிட்டதொரு தரப்புக்கு நான் ஆதரவாகச் செயற்பட்டேன் என்ற குற்றச்சாட்டினை முறியடிக்கும் வகையில் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியிருக்கும் தகவல் அமைகிறது என நான் நம்புகிறேன்.

**கேள்வி:** புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழ்ச் சமூகத்தினர் தற்போதும் முனைப்புடன் செயற்பட்டு வருவதோடு தனி நாட்டினை அடைவதையே இப்போதும் தங்களது இலக்காகக் கொண்டிருக்கிறார்கள். போர் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் புலம்பெயர் தமிழர்களுக்கான உங்களின் செய்தி என்ன?

**பதில்:** ஜனநாயக வழிமுறைகள் ஊடாக அவர்கள் செயற்படவேண்டும் என்பதே புலம்பெயர் தமிழர்களுக்கான எனது செய்தி. பேச்சுத்தான் அவர்களது ஆயுதமாக இருக்கவேண்டும். இலங்கையினது ஜனநாயக முறைமைகளின் அடிப்படையில் செயற்படுவதோடு போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலையினை ஏற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துமாறு புலம்பெயர் சமூகத்திற்கு நான் ஆலோசனை வழங்குகிறேன்.

சட்டரீதியான தமிழர்களது உரிமைகள் வென்றெடுக்கப்படவேண்டும் என்பதற்கு அனைத்துலக ரீதியில் அனைத்துத் தரப்பினரும் தங்களது காத்திரமான ஆதரவினை வழங்கி நிற்கிறார்கள். ஆனால் தனியான ஆட்சி அலகினை அமைக்கும் தமிழர்களின் முனைப்புக்கு அனைத்துலகத்தின் ஆதரவு ஒருபோதும் கிடைத்துவிடாது.

தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுக்களில் ஈடுபடுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தினையும் கோருகிறோம். போர் முடிவுக்கு வந்துவிட்டது. தற்போது இன நல்லிணக்கம் மற்றும் தீர்வு நோக்கிய பேச்சுக்களிலேயே கவனம் செலுத்தப்படவேண்டும்.

**கேள்வி:** போர் வேறுவிதமான முடிவினைச் சந்தித்திருக்கலாம் என்றும் போரின் இறுதிநாட்களில் உயிரிழப்புக்கள் குறைவாக இருந்திருக்கலாம் என்றும் நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** போரின் இறுதி நாட்களில் கண்முன்னே விரிந்த சம்வங்கள் துன்பகரமானது. ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன்போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு இரண்டு தரப்பும்தான் பொறுப்புச் சொல்லவேண்டும். எவ்வாறிருப்பினும் போரின் முடிவு தவிர்க்கமுடியாததாக மாறிவிட்ட பின்னராவது புலிகள் தங்களது முடிவினை மாற்றிக்கொள்வார்கள் என நா[illegible] வெகுவாக நம்பியதும் ஒன்றும் இரகசியமானதல்ல. அப்போது பலரும் புலிகளுக்கு அத்தகைய ஆலோசனைகளையே வழங்கினர்.

**கேள்வி:** போருக்குப் பின்னான இலங்கையில் நோர்வே வகிக்க விரும்பும் பங்குதான் என்ன?

**பதில்:** இலங்கையுடன் நோர்வே தனித்துவமான உறவினைக் கொண்டிருந்தாலும் இலங்கை தொடர்பில் ஒஸ்லோ சிறப்புப் பணி எதனையும் முன்னெடுக்கவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையினர் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு இடையிலும் பேச்சுக்களின் பங்காளராக ஆக்கபூர்வமான பங்கினை வகிப்பதற்கு நோர்வே தயாராக இருக்கிறது.

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் சிறந்த இருதரப்பு உறவுகள் காணப்படுகிறது. இலங்கையுடன் அபிவிருத்திசார் ஒத்துழைப்பினைத் தொடர்ந்தும் பேணுவதற்கு நாங்கள் விரும்புகிறோம். தவிர நோர்வேயின் தனியார் துறையினர் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுவதற்குக் கவர்ந்திழுக்கும் நம்பி[illegible]கையும் எங்களிடம் இருக்கிறது.

## ஒற்றைத் தலைவலிக்கான காரணத்தை இலங்கை வைத்தியர் கண்டுபிடித்து சாதனை

(கொழும்பு)

ஒற்றைத் தலை வலி நோய்க்கான காரணத்தைக் கண்டு பிடித்த பெருமையைப் பெற்று உள்ளார் இலங்கை வைத்தியர் ஒருவர். கண்டி மாவட்டத்தின் கம்பொல தேசிய வைத்திய சாலையில் கடமை ஆற்றும் வைத்திய கலாநிதி ரத்னசிறி பண்டாரவே இச்சாதனையை நிகழ்த்தியவர்.

இவர் 13 வருடங்கள் இந்நோய் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வந்தார். நைத்திரிக் ஒக்சைட் வாயுவின் ஊடுருவல் நெற்றியின் நாளங்களை விரிவடையச் செய்கின்றமையாலேயே இந்நோய் ஏற்படுகின்றது என்பது இவரின் கண்டுபிடிப்பு.

தனது இந்த ஆய்வுக்கு பேராதனைப் பல்கலைக்கழகம், கண்டி பொது வைத்தியசாலை, கம்பொல போதனா வைத்தியசாலை ஆகியன உதவிகள் செய்தாக அவர் தெரிவித்துள்ளார்.

## கதிர்காமத்தில் நடைபெறவுள்ள தேசிய சுதந்திர தினநிகழ்வுகள்

(கொழும்பு)

நாட்டின் 63ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் மிகப் பிரமாண்டமான அளவில் கதிர்காமத்தில் நடைபெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி காலை 6.30 முதல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரி விஹாரை, பிள்ளையார் கோயில், முஸ்லிம் பள்ளிவாசல், புத்தள கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றில் மத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் டி.எம். ஜயரட்ன, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ராஜதந்திரிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மிதிவெடி அகற்றும் பணியாளர்களுக்கு செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிகளை அகற்றுகின்ற பணிகளில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த மற்றும் தற்போது ஈடுபட்டு வரும் பணியாளர்களுக்கான விசேட கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி அதனை ஆக்கபூர்வமான செயற்பாடுகளாக்கும் நோக்கத்துடன் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் ஏற்கனவே மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுத் தற்போது பணியில் இல்லாதவர்களும், தற்போது மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவோரும் கலந்துகொள்ளலாம்.

இப் பணியாளர்களது நலன் கருதிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இக் கலந்துரையாடலின் எதிர்பார்ப்பாகும்.

எனவே, இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி மேற்படி பணியாளர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெலிக்கடையில் 48 கைதிகள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற கைதிகள் பொலிஸாரைத் தாக்கிய சம்பவத்தில் 48 கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் போதைப்பொருள் இருப்பதாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைதிகள் பொலிஸாரைத் தாக்கிய சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் 48 கைதிகள் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைதிகள் தொடர்பான விசாரணையை இதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்று மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கைதடி நவீல்ட் பாடசாலைக்கு சமையல் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உறுப்புரிமைச் சங்கங்களின் நிதி உதவியுடன் சமாசமும் இணைந்து கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் உபகரணங்கள் மற்றும் உணவுப்பொருட்களை வழங்கியுள்ளது.

சமாச இயந்திரசாலைப் பிரதிநிதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி நிதிக்குழுப் பிரதிநிதிகள் அண்மையில் பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து இப்பொருட்களைப் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரனிடம் கையளித்ததாக சமாசத்தின் பொது முகாமையாளர் வி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

# நோயாளருக்கு சேவை மனப்பான்மையுடனும் கடமையுணர்வுடனும் பணியாற்ற வேண்டும்

## நியமனம் பெற்ற ஊழியர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் பேச்சு



(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலை பணியாளர்கள் நோயாளர்களுடன் சேவை மனப்பான்மையுடனும் கடமை உணர்வுடனும் பணியாற்ற வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்றி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சமயா சமய சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கும் நிகழ்விங்களை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இங்கு கடமைபுரியும் ஒவ்வொரு பணியாளர்களும் சேவை மனப்பான்மையுடனும் கடமை உணர்வுடனும் பணியாற்ற வேண்டும். இதனை தொழில் வாய்ப்பாக மட்டும் எண்ணாது மக்களுக்கான சேவையாகவும் செய்ய வேண்டும் என்பதே முக்கியமானது. ஒவ்வொருவரும் நிர்வாகத்துக்கு கீழ்ப்படிந்து நடக்கும் அதேவேளை மன உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக வைத்தியசாலை நோயாளர்களுடனும் பார்வையாளர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறு அவர்களால் அசௌகரியங்கள் நேரும் பட்சத்தில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்த வேண்டுமெனவும் அவ்வாறு நிர்வாகம் கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

முக்கியமாக வைத்தியசாலையின், சுத்தம், சுகாதாரம் தொடர்பில் அதிக அக்கறை கொண்டு எல்லாத் தரப்பினரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்ட அமைச்சர் அவர்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் 75 பேருக்கு கையளிக்கப்படுகின்ற அதே வேளை ஏனையோருக்கு இவ்வருட நடுப்பகுதியில் நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

இவ்வைபவம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பவானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளின் வெல்ட், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகியவற்றிலிருந்து கடந்த காலங்களில் தொண்டர்களாக பணியாற்றிய 75 பேர் சமயா சமய சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக தற்காலிக நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

நியமனக் கடிதங்கள் சிலவற்றை சம்பிரதாயபூர்வமாக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வைத்தியசாலை பிரதம கணக்காளர் விஜயரகுநாதன் செயலாளர் பிரசாத், நிர்வாக உத்தியோகத்தர் மோகனதாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சிறுவர் துஷ்பிரயோகம்; தடுத்து நிறுத்த நடவடிக்கை

## – தொண்டர் குழுக்கள் அமைப்பு –

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்காக சிறுவர் இல்லங்களின் அருகாமையில் தொண்டர் குழுக்களை அமைக்கத் தீர்மானித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

இது தொடர்பாக சபை ஆராய்ந்துள்ளதாகவும், இக்குழுக்களை அமைத்து அதன் மூலம் சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்குழுவில் அவ்வப்பகுதி மதகுருமார்கள், ஆசிரிய, ஆசிரியைகள் உட்பட பிரபல முக்கியஸ்தர்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தினால் 348 சிறுவர் இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் இதில் 13 ஆயிரத்து 500 சிறுவர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட அரசாங்கத்தினால் 22 சிறுவர் இல்லங்களும், தொண்டர் நிறுவனங்களினால் 4 இல்லங்களும் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரசார யுத்தம்....

எதிர்வரும் மாதம் முதல் வாரத்திலிருந்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அந்த கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உள்ளூராட்சி சபை தேர்தல் கொள்கைகள் தொடர்பில் வாக்காளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்புகளை இறுதி இரண்டு வாரங்களில் மேற்கொண்டுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

## வேட்புமனு நிராகரிப்பு....

இதன்போது எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடவுள்ள, சகல கட்சிகளும் தேர்தலுக்காக வலுவான நிலையில் தயாராகுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையே அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, தேர்தல் பிரசார நடவடிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பிலும் மிக விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவித்தார். இதுதவிர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடவுள்ள இளம் வேட்பாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# புலிகளை வெற்றிகொண்டதன் சூட்சுமம்....

"புலிகளுடனான போரின் போது கடந்த காலத்தில் நாம் தோல்விகளைச் சந்திப்பதற்கு வழிவகுத்த காரணங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து அத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதவாறு நாங்கள் பார்த்துக் கொண்டோம் என கோத்தபாய ராஜபக்ஷ கூறுகின்றார்.

இதன் காரணமாகவே அனுராதபுரம் வான்படைத் தளத்தின் மீதான தாக்குதல் மற்றும் முகமாலைப் படுதோல்வி ஆகிய தோல்விகளின் பின்னரும் நாம் விட்டுக்கொடுக்காது படை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். அனுராதபுரம் வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலில் படைத்தரப்பினர் பல வான் கலங்களை இழந்திருந்ததோடு, முகமாலை தாக்குதலில் 125 படையினரை இழந்திருந்தோம்.

இலங்கையின் முப்படைகளின் தளபதி என்ற வகையில் நிலைமைகளைச் சரியாக கணிப்பிட்டு செய்து முடிவெடுக்கும் திறமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லாது இருந்திருந்தால், தோல்விகளைக் கண்டு துவண்டிருப்போம். போரை முடிவுக்குக் கொண்டுவந்து புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி அழைத்திருப்பார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

அத்துடன், நேரத்திற்கும், தருணத்திற்கும் ஏற்றவகையில் சரியான முடிவுகளை எடுத்ததும் புலிகளை வெற்றி கொள்வதற்கு உதவிபுரிந்த இன்னொரு அம்சம் என கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிடுகின்றார்.

சித்தாந்தங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் மட்டும் கட்டுப்பட்டு செயற்படமுடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. சித்தாந்தங்களின் அடிப்படையில் மட்டும் முடிவுகளை மேற்கொள்ளாது, கள நிலைமைகளுக்கு ஏற்றவகையில் நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்.

களநிலைமைகளை ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ந்து நிலைமைகளை அதற்கு ஏற்ற வகையில் தந்திரோபாயமான முடிவுகளை எடுக்கும் மனவுறுதி எங்களிடம் இருக்க வேண்டும்.

கள நிலைமைகளின் தேவைகளுக்கு ஏற்ப புலிகளுக்கு கால அவகாசத்தினைக் கொடுக்காத வகையில் படைத்தரப்பினரை விரைவாக நகர்த்தி நாங்கள் போரிட்டதன் விளைவு தான் நாங்கள் போரில் பெற்ற வெற்றி. இவ் வெற்றி தான் எமது ஆட்சியின் மீது மக்களின் நம்பிக்கை வலுப்பெறுவதற்கு காரணமாக இருந்தது. இந் நம்பிக்கைதான் உறுதியான ஆட்சியினை நாம் முன்னெடுப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தது.

இலங்கையின் முன்னைய அரசாங்கங்கள் தேவைக்கு ஏற்ற வகையில் படைத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு முனையவில்லை. இந் நிலையிலேயே புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற உறுதியான ஒரு முடிவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்தார்.

புலிகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்வதற்கும், அவர்களிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை தொடர்ந்து தக்கவைப்பதற்கு வழி செய்யும் வகையில் அனைத்து வளங்களையும் தயக்கமின்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொடுத்தார்.

படைத்தரப்பில் இருந்த ஆட்பற்றாக்குறையினை நாங்கள் சுட்டிக்காட்டிய போது, புதிய ஆட்திரட்டல்களை மேற்கொள்வதற்கான அனுமதியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கி இருந்தார்.

போரில் ஈடுபட்டால் உயிரிழந்து விடுவோம் அல்லது உடல் உறுப்புக்களை இழந்து விடுவோம் என்ற எண்ணத்தை மாற்றும் வகையில், இளைஞர்கள் படைத்தரப்பில் இணைந்து கொள்வதைத் தூண்டும் வகையில் விசேட திட்டங்களை வகுத்த போது, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படைத்தரப்பில் இணைந்து கொண்டார்கள்.

அத்துடன், இவ்வாறு படைத்தரப்பில் இணையும் படையினருக்கான நலவாழ்வுத் திட்டங்களை முன்னெடுப்பது எனவும் நாங்கள் அப்போது முடிவு செய்திருந்தோம்.

படையினருக்கான நலவாழ்வுத் திட்டங்களை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டதுடன், படையினரின் தேவைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் பரப்புரைகளையும் முன்னெடுத்தோம்.

சரியான திட்டமிடல் மற்றும் உறுதியான நடவடிக்கைகள் மூலம் படைத்துறைசார் ஆளுமைகளை வளர்த்ததோடு, படைத்தரப்பு சார்ந்து மேற்கொள்ளப்பட்ட உளவியல் போரையும் தோற்கடித்தோம்.

அத்துடன், களத்தில் மூர்க்கமாக போரிட்டுக் கொண்டிருந்த படையினரின் நலன்களைக் கவனிப்பது தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இவ்வாறு புலிகளுக்கு எதிராக நாம் மேற்கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்களின் போது தவறுகள் ஏற்படுமிடத்தில், அத்தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் அத்தவறுகள் இடம்பெறாத வகையில் தாக்குதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

புலிகள் வான் வழியாக தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்ற அச்சம் இருந்த போது, அதனை முறியடிக்கும் வகையில் விமானப் படையினரும் உஷார் நிலையில் இருந்தனர்.

புலிகளின் முதலாவது வான் வழித் தாக்குதல் இடம்பெற்ற பின்னரே தாழ்வாகப் பறந்து தாக்குதலை நடாத்தும் விமானங்களை முறியடிக்கும் வல்லமை எங்களிடம் இல்லை என்பதை நாம் புரிந்து கொண்டவுடன், தாழ்வாகப் பறந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் எதிரியின் விமானங்களை இலக்கு வைப்பதற்கு ஏற்ற வகையில் விமான எதிர்ப்புப் பீரங்கிகளை தயார் நிலையில் வைத்திருந்தோம்.

அதேவேளை. படை நடவடிக்கையின் போது இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக படை நடவடிக்கைகளை நாம் பலமுறை இடைநிறுத்தி இருந்தோம்.

இந்தியாவின் அழுத்தங்களை அடுத்தே வடமராட்சி மீது முன்னெடுக்கப்பட்ட படை நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

இத்தகைய நெருக்கடி நிலை ஏற்படாதவாறு இந்தியாவுடன் இம்முறை சிறந்த உறவைப் பேணியதோடு, அவர்களின் இத்தகைய அழுத்தங்களைப் பொருட்படுத்துவதில்லை என்ற தீர்மானத்தையும் நாம் எடுத்திருந்தோம்.

இலங்கையின் அரசியல் நிலைமைகள் தமிழ்நாட்டின் மீது அதிக செல்வாக்கினைச் செலுத்தும் என்பதாலேயே இந்தியா தலையிட முனைந்தது.


இந்நிலையில், நாங்கள் மூவரடங்கிய உயர்மட்டக் குழுவொன்றை நியமித்திருந்ததோடு, இந்திய அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சர் உட்பட மூவர் அடங்கிய குழு ஒன்றை நியமித்திருந்தது.

எங்களுடைய படை நடவடிக்கைகள் குறித்து இலங்கையின் மூவரடங்கிய குழு இந்தியாவின் சிறப்புக் குழுவுக்கு விளக்கங்களை வழங்கியதோடு, தேவை ஏற்படும் வேளைகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தான் நாங்கள் முன்னெடுத்த படை நடவடிக்கைக்கு புதுடில்லியின் ஆதரவினைப் பெற்றோம்" என இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாக இச் செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புலிகளுடனான போரின் போது இலங்கை படைத்தரப்பினர் போர்க்குற்றங்களையும், மனிதவுரிமை மீறல்களையும் மேற்கொண்டதாக சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் உட்பட மேற்கத்தைய நாடுகளும் சுட்டிக்காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை-பங்களாதேஷ் கூட்டு மேலும் வலுவடைகிறது நட்புறவு



## தயாராகிறது முக்கிய ஒப்பந்தங்கள்

(கொழும்பு)

இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையே ஆறு முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவினை மேலும் மேம்படுத்தும் வகையிலேயே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகவுள்ளன.

முதலீடு, ஏற்றுமதி, திட்ட பரிமாற்றங்கள், விவசாயம், மீன்பிடி மற்றும் கல்வி ஆகிய துறைகளை பரஸ்பரம் மேம்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இலங்கை வெளிவிவகார செயலாளர் ரொமேஷ் ஜயசிங்கவுக்கும் பங்களாதேஷ் வெளிவிவகார செயலாளர் மொஹமட் மஜாருல் க்குவோஸூற்கும் இடையே டாக்காவில் இடம்பெற்ற பேச்சுவார்தையின் போது இந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு பின்னர் பங்களாதேஸூற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பங்களாதேஷ் ஜனாதிபதியும் இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவர் என நம்பப்படுகிறது

இந்த நிலையில், வெளிவிவகார செயலாளர்களுக்கு இடையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில், எதிர்வரும் சார்க் மாநாடு உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 450 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

## தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 450 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய் யப்பட்ட 2047 வேட்பு மனுக்களில் 1597 வேட்பு மனுக்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமான வேட்பு மனுக்கள் நிராகரிப்பட்ட தாகத் தெரிவித்த அவர், அம்பாறை மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட 164 வேட்பு மனுக்களில் 48 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதனைச் சுட்டிக் காட்டியும் உள்ளார்.

இந்நிலையில், நிராகரிக்கப்பட்ட 48 வேட்பு மனுக்களில் 43 சுயேட்சை குழுக்களது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் கொள்ளையர் குழு கைது! விரைவில் வெளிவரும் திகில் தகவல்

யாழில் இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரி ஒருவர் அண்மையில் கோப்பாய் விசேட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் விசாரணை மேற்கொண்டபோது மிகவும் அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. மேலும் இவர் கொடுத்த தகவலின்படி கொள்ளைக் கும்பல்களைச் சேர்ந்த ஒன்பது பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்த வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் போது இவர்களிடமிருந்து 500 பவுனுக்கு மேலான தங்க நகைகளை மீட்க முடியும் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுக்கும் இக்கொள்ளைக் குழுக்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்திருக்கின்றனர். அத்தோடு நீதிமன்ற விசாரணைகளுக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களிடமிருந்து மேலும் அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவர இருப்பதாகத் தெரிய வருகிறது.

## தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டிகள்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகள் இன்று மு.ப 8 மணிக்கு கிளி. மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. வட மாகாணத்திலிருந்து இப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை தவறாது பங்குபற்றுமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# கட்டுநாயக்காவில் விபத்து; கொரிய நாட்டுப் பிரஜை பலி!

(கொழும்பு)

விபத்துச் சம்பவமொன்றில் கொரிய நாட்டுப் பெண்ணொருவர் பலியாகியுள்ளதுடன், அவரது கணவர் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுதளத்தின் பாதுகாப்பு வேலிக்கு அருகிலுள்ள வீதியில் இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வாகனத்தின் சாரதி கட்டுநாயக்க இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை, காயமடைந்த கொரிய நாட்டு பிரஜை நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# நீதிமன்றத்தை அவமதித்தார்...

இடைநிறுத்தப்பட்ட அம்பாறை மாவட்ட சீரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.ஜயவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாம் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதாக பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவினால், கடந்த டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில், உறுதி அளித்திருந்ததாக மனுதாரர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அந்த உறுதி மொழியினை நிறைவேற்றாது, தம்மை டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி தம்மைப் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்வதாக தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பி யிருந்ததாக மனுதாரர் நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் அசோகா டி சில்வாவின் தலைமையிலான மூவரைக் கொண்ட நீதிமன்ற குழு, அடுத்த மாதம், 11ஆம் திகதி, பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் கெஸ்பேவ நகரசபை எல்லை க்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள களஞ்சிய அறை ஒன்றில் உரப்பை ஒன்றுக்குள் இருந்து அழுகிய சடலம் ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த அறைக்குள் இருந்து துர்நாற்றம் எடுத்து இருக்கின்றது.

அங்கு கடமை ஆற்றும் ஊழியர் ஒருவர் இதை அடுத்து அறை முழுவதையும் சோதனை செய்தார்.

அப்போதே உரப்பைக்குள் இருந்த அழுகிய சடலத்தைக் கண்டு கொண்டார். தகவல் அறிந்த கொஸ்பேவ பொலிஸ் நிலைய பொலிஸார் விசார ணைகளை முடுக்கி விட்டு உள்ளார்.

மரணம் ஆனவர் யார்? என்பது மர்மமாகவே உள்ளது. ஆணா? பெண்ணா? என்பதுகூட இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# பீடி ஒன்று வேண்டுமா? 150 ரூபாய் தாருங்கள்

## சிறையில் நடக்கிறது வியாபாரம்

அனுராதபுரம் சிறைச் சாலையில் பீடி, போதைப் பொருட்கள் ஆகியவற்றுக்கு ஆனை விலை. சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திர ஸ்ரீ கஜதீர இத்தகவலை வழங்கினார்.

சாதாரண பீடி ஒன்றின் விலை 150 ரூபாய்வரை போகின்றது என்றார். கைதிகள்தான் சிறையில் உள்ள ஏனைய சகபாடிகளுக்கு இவற்றை விற்கின்றனர் என்றும் இவர் சொன்னார்.

சிறைக் கைதிகளுக்கு வெளியில் இருந்து கொண்டு வரப்படுகின்ற உணவில் இருந்து பீடி, கஞ்சா போன்றவை இருந்திருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாடு முழுவதும்....

அச்சுறுத்தப்பட்டமை, மாத்தளை தேர்தல் செயலகத்தில் ஒரே கட்சியைச் சேர்ந்த இரு குழுக்கள் மோதிக் கொண்டமை போன்ற சம்பவங்கள் பதிவாகியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இரத்தினபுரி - கஹவத்தையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், தேர்தல் போஸ்டர்கள் சேதமாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களுடம் பதிவாகியுள்ளன.

## சர்வதேச...

தலைவர் அபயசிங்க விளக்கங்களை வழங்கினார். 50 வருடங்களுக்கு மேலாக செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர்களாக வேலை செய்தவர்களையும் பாராட்டும் நிகழ்விலும் கோனே பங்கு பற்றினார். இவர் இன்று மாலை இலங்கையை விட்டு பயணமாகவுள்ளார்.

## விடைபெற்றுச்...

பண்டாரநாயக்க குமாரதுங்க, தமது ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிக்க விருப்பம் வெளியிட்டுள்ளதாக ஆணைக் குழுவின் ஆலோசகர் லஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

## வன்னியில் வெடி விபத்து...

ஏ9 வீதியிலிருந்து விசுவமடு ஊடாக புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பிரதான வீதியில் விசுவமடுவுக்கு சமீபமாக வீதித் திருத்தப் பணிகளில் ஒரு தொகுதி தொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வெள்ளம் ஓடுகின்ற வாய்க்கால் ஒன்றுக்கு சீமெந்து கலவையிடும் வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தது. மாலை 3 மணியளவில் இளைஞர் ஒருவர் மண்வெட்டியால் நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தார்.

இதன்போது திடீரென பாரிய வெடியோசை கேட்கவே அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். மூவர் காயங்களுக்குள்ளாகி துடிதுடித்துக் கொண்டிருந்தனர். இவர்களில் இருவருக்கு மோசமான காயங்கள் காணப்பட்டன. இவர்கள் இருவரும் உடனடியாக தர்மபுரம் மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அங்கு அவசர சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது. எனினும் ஒருவர் சத்திரசிகிச்சைப் பிரிவிலேயே மரணமடைந்துவிட்டார்.

மற்றையவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

மேற்படி வெடிவிபத்து இடம்பெற்ற பகுதி ஏற்கனவே கண்ணிவெடி அகற்றப்பட்டு பாதுகாப்பு உத்தரவாதச் சான்றிதழ் வழங்கப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.


யாழ்.மாவட்ட மக்களுக்கு

ஷாலோம்

SEC

SHALOM

SHALOM வழங்கும் நற்செய்தி...!

உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.

குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...

வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரைறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-

SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/272)

தொலைபேசி: 0217901798 - 0771044861

தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.